## நிறுவனத்தின் பெயர்

தேசிய லொத்தர் சபை

## சட்டவடிவம்

ஆஸ்பத்திரி லொத்தர்கள் நடைமுறை நீக்கப்பட்டு பதிலாக 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை (தே.லொ.ச) உருவாக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கத் (திருத்தச்) சட்டத்தின் மூலம் மேற்படி சட்டத்தின் சில விதிகள் நீக்கப்பட்டுத் திருத்தங்கள் செய்யப்பட்டன.

## ஸ்தாபிக்கப்பட்ட ஆண்டு

1963

## நிதியாண்டின் முடிவு

டிசம்பா 31

## பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்

முகவரி : இல.234/2,
காலி வீதிஇ
கொழும்பு 03.

தொலைபேசி : 2470662, 2470663, 4607000, 4716990 – 2

தொலைநகல்: 2421897, 2326528, 2433631, 2470661

மின் அஞ்சல்: nlbgen@sltnet.lk

இணையத்தளம்: www.nlb.lk

## கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

## வங்கியாளர்கள்

மக்கள் வங்கி

# 31 டிசம்பர், 2011 இல்

# நிறைவடைந்த 48 ஆவது ஆண்டுக்கானது

" எளிமையான ஆரம்பத்தினூடு மிகப் பெருஞ் சாதனைகளை நிகழ்த்திய 48 ஆண்டுகால பயணம் அனைவரையும் வெற்றியாளர்களாக்கியுள்ளது "

## " அனைவரும் வெற்றியாளர்கள் "

## உள்ளடக்கம்

### மேலோட்டம்


எமது நோக்கு, பணி இலக்கு, நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் 63

ஆரம்பம் மற்றும் முக்கிய அடைவுகள் 65

நிறுவனம் சார்ந்த தகவல்கள் 68


### முகாமைத்துவத்தினரின் அறிக்கைகள்


தலைவரின் மீளாய்வு 72

தொழிற்படு பணிப்பாளரின் அறிக்கை 76

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை 80


### நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்


வருமானக் கூற்றுகள் 82

ஐந்தொகை 83

நிதிப்பாய்ச்சல் கூற்று 84

உரிமைமுதலிலான மாற்றங்கள் 85

கணக்கீடுகளுக்கான குறிப்புகள் 86

முக்கிய கணக்கியல் கொள்கைகள் 90


### செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு


உற்பத்தி வரிசை 95

வரைபட மீளாய்வு 96


கடந்த தசாப்த சுருக்கம் 104

நிறுவனத்தின் சமூக பொறுப்புகள் சார்ந்த நடவடிக்கைகள் 106


### கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை


கணக்காய்வாளர் நாயக அறிக்கை 109

# மேலோட்டம்




## எமது நோக்கு


இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக லொத்தர்கள் மூலம் வருமானத்தைச் சேகரிப்பதில் முதன்மைப் பங்காளராக இருத்தல்.

## பணி இலக்கு

பொருளாதார, சமூக அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பங்களிப்பை அதிகரிப்பதற்காக லொத்தர்கள் மூலம் வருமான உற்பத்தியை விருத்தி செய்தல்.




அனைவரும் வெற்றியாளர்கள்

## நிறுவனத்தின் குறிக்கோள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதியை உருவாக்குதல்.
- அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் நிறுவனங்களிடையே முதன்மை நிறுவனமாதல்.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.
- நாட்டின் வேலை வழங்கலுக்குப் பங்களிப்புச் செய்தல்

## சபையின் நோக்கங்கள்

- தற்போதைய வருமானம் மற்றும் இலாபமீட்டலின் மட்டத்தை அதிகரிக்கச்செய்து அரசாங்கத்துக்கு வழங்கும் பங்களிப்பை அதிகரித்தல்.
- சந்தையின் தலைமைத்துவ நிலையைப் பேணுதல்.
- செயற்பாட்டு வினைத்திறமையை விருத்தி செய்தல்.
- நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.
- பணியாளர்கள் மத்தியில் வினைத்திறமையையும் செயற்திறனையும் விருத்தி செய்தல்.
- வாடிக்கையாளரின் திருப்தியை உச்சப்படுத்துதல்.

## ஆரம்பம் மற்றும் முக்கிய அடைவுகள்

### ஆரம்பம்

ஆரம்பத்தில் நாட்டின் சுகாதாரச் சேவைகளுக்கு நிதி வழங்குவதற்காக இலங்கையில் அரசாங்கத்தினால் லொத்தர் நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு நாட்டின் சுகாதாரச் சேவைகளை முன்னேற்றுவதற்கும் விருத்தி செய்யும் நோக்கத்திற்காகவும் லொத்தர் ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு உள்ளூராட்சி அமைச்சர் முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்தார். இந்த முன்மொழிவின் பெறுபேறாக, 1955 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க ஆஸ்பத்திரி லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.



★ ஆரம்ப கால லொத்தர் சீட்டிழுப்பு

சுகாதாரத்துறை தவிர்ந்த ஏனைய அபிவிருத்தித்திட்டங்களிற்கும் நிதியீட்டப்படவேண்டிய தேவையினால் 1960களில் ஒழுங்கமைக்கப்பட்ட லொத்தரின் நோக்கத்தை விரிவுபடுத்த வேண்டியதன் தேவையை அரசாங்கம் புரிந்து கொண்டது.

இதன் பெறுபேறாக, ஆஸ்பத்திரி லொத்தர் நடைமுறை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக நாட்டின் அபிவிருத்திக்கான நிதியை உருவாக்குவதற்கென 1963ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் கீழ் பின்னர் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

முக்கிய அடைவுகள்

## 1963 – 1973 – முதலாவது தசாப்தம்

**1963** ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தேசிய லொத்தர் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

**1964** டொரிங்டன் சதுக்கத்தில் முதலாவது தேசிய லொத்தர் சீட்டிழுப்பு மேற்கொள்ளப்பட்டது (20/02/1964)

**1965** வெற்றியாளர்களுக்குப் பென்ஸ் கார் பரிசளிப்பு முறை ஆரம்பமானது.

**1967** இரத்தினபுரியில் முதலாவது கிளை அலுவலகம் திறக்கப்பட்டது.

**1968** ஜாதிக சம்பத லொத்தர் ஆரம்பிக்கப்பட்டது.

**1970** ஜாதிக சம்பத லொத்தர் மஹஜன சம்பத லொத்தர் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது (28/07/1970)

## 1974 – 1983 – இரண்டாவது தசாப்தம்

**1975** இல. 111/1, சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள புதிய கட்டிடத்துக்கு ,டமாற்றம் செய்யப்பட்டது.

**1977** ஜாதிக சம்பத லொத்தரின் விலை 50 சதத்திலிருந்து ரூ. 1/- ஆக அதிகரிக்கப்பட்டது.

## 1984 – 1993 – மூன்றாவது தசாப்தம்

**1987** சுபிரி ஜாதிக லொத்தர் அறிமுகம். (11/04/1987)

**1988** மஹஜன சம்பதவின் விலை ரூ. 1/- இலிருந்து ரூ.8/- ஆக அதிகரிக்கப்பட்டது.

- ★ லொட்டோ லொத்தரின் அறிமுகம் (செப்டெம்பர் 1988).
- ★ ரூபவாஹினியில் மஹஜன சம்பதவின் முதலாவது சீட்டிழுப்பு ஒளிபரப்பானது (10/05/1988).

**1989** மஹஜன சம்பதவின் விலை ரூ. 8/- இலிருந்து ரூ.10/- ஆக அதிகரிக்கப்பட்டது.

**1992** எயர்போட் சுப்பர் ட்றோ லொத்தரின் அறிமுகம்.

## 1994 – 2003 – நான்காவது தசாப்தம்

**1994** வாசனா சம்பத லொத்தரின் அறிமுகம்.

**1995** கொவிசெத லொத்தரின் அறிமுகம்.

**1996** சமுர்தி லொத்தரின் அறிமுகம்.

**1997** சிரம வாசனா லொத்தரின் அறிமுகம்.

- ★ செவன லொத்தர் தேசிய லொத்தர் சபையுடன் ஒன்றிணைக்கப்பட்டது.

**1999** சுபிரி வாசனா சம்பத லொத்தரின் அறிமுகம்.

**2000** ஜயவிரு லொத்தரின் அறிமுகம்.

## 2004 இலிருந்து இன்றைய திகதி வரை – ஐந்தாவது தசாப்தம

**2004** சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி அளிப்பதற்காக சரண லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ ஊழியர் நன்மைக்காக நலன்புரி மற்றும் சிக்கன நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

**2005** 2005ஆம் ஆண்டு SLIM விருது விழாவில் வங்கி மற்றும் நிதிச் சேவைகள் பிரிவில் சிறந்த வியாபார நாமம் என்ற விருதை மஹஜன சம்பத வென்றது.

**2006** லொட்டோ லொத்தர் நிறுத்தப்பட்டு சுவசெத லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ அதிகூடிய சுப்பர் பரிசுத் தொகை மஹஜன சம்பதவின் மூலம் வழங்கப்பட்டது (61.3மி).

**2007** நியூ எயர்போட் லொத்தர் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ எயர்போட் சுப்பர் ட்றோ லொத்தரின் விலை அ.டொலர் 25 இலிருந்து அ.டொலர் 50 ஆக அதிகரிக்கப்பட்டது.

**2008** குலுக்கல் மூலம் நடைபெறும் லொத்தர் சீட்டுக்களின் விலை ரூ.10/- இலிருந்து ரூ.20/-ஆக அதிகரிக்கப்பட்டது (02/09/2008).

**2010** சபையானது அதிகூடிய விற்பனையை ஒரே மாதத்தில் பதிவு செய்தது (ஒக்டோபர் 2009 - ரூ. 913 மில்லியன்).

**2011** வரலாற்றில் முதன் முறையாக ரூ.10 பில்லியன் விற்பனையை அடைந்தமை.

★ ஜயவிரு லொத்தர் நிறுத்தப்பட்டு சுபிரி வாசனா சம்பத லொத்தர் புதன் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ மஹஜன சம்பத லொத்தர் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டது.

★ நியூ எயர்போர்ட் லொத்தர் சீட்டிழுப்பு நடாத்தப்பட்டு, பலவீனமான செயற்பாடு காரணமாக இந்த லொத்தர் நிறுத்தப்பட்டது.

★ ரூ. 10 மில்லியனுக்கும் அதிகமான சுப்பர் பரிசுகள் 5 நான்கு வாரங்களினுள் வெல்லப்பட்டன. அதில் 4 அடுத்தடுத்த தினங்களில் வெல்லப்பட்டன.





★ நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி நடைமுறையில் மேற்கொள்ளப்படும் சீட்டிழுப்பு

## பணிப்பாளர்கள்






| | | |
|---|---|---|
| 01. | திரு. சமிந்த அதுளுவகே | தலைவர் |
| 02. | திரு. ஜானக ஸ்ரீ வர்ணசிங்க | தொழிற்படும் பணிப்பாளர் |
| 03. | திரு. ஆர்.ஜே.ரி.ரவி அபேவர்தன | பணிப்பாளர் |
| 04. | திரு. வீ.எம்.அமீன் | பணிப்பாளர் |
| 05. | திரு. சம்பத் திசாநாயக்க | பணிப்பாளர் |
| 06. | திரு. சமன் கலப்பதி | அவதானிப்பாளர் |





"வரலாற்றில் முதன்முறையாக சபையானது அனைவரும் பெருமையடையும் வண்ணம் ரூ.10 பில்லியன் விற்பனை இலக்கை அடைந்ததன் மூலம், 2011 தேசிய லொத்தர் சபைக்கு சிறப்புமிக்க ஆண்டாக அமைந்தது."

2011 டிசம்பர் 31ஆம் திகதி நிறைவுற்ற ஆண்டுக்கான இந்த மீளாய்வினூடாக எனது செய்தியை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வரலாற்றில் முதன்முறையாக சபையானது அனைவரும் பெருமையடையும் வண்ணம் ரூ.10 பில்லியன் விற்பனை இலக்கை அடைந்ததன் மூலம், 2011 தேசிய லொத்தர் சபைக்கு சிறப்புமிக்க ஆண்டாக அமைந்தது.

நாம் இந்த இலக்கை அடைவதில் உறுதியுடன் இருந்ததுடன் கடந்த ஆண்டு எனது மீளாய்வில் இதுபற்றி குறிப்பிட்டிருந்தேன்.

## பொருளாதாரச் சூழல

2011இன் 8.3 வீதமான பொருளாதார வளர்ச்சியின் மூலம் அதன் உறுதித் தன்மையைக் காணக் கூடியதாவுள்ளது. இது முன்னைய ஆண்டின் 8 வீத பொருளாதார வளர்ச்சியின் மூலம் நிருபணமாகிறது. தனிநபர் வருமானமானது அமெரிக்க டொலர் 2836 ஆக 2011இல் அதிகரித்துள்ளது. இது முன்னைய ஆண்டில் அமெரிக்க டொலர் 2400 ஆக இருந்தது. இவ்வதிகரிப்பானது 18.2 வீத அதிகரிப்பாகும். மேலும், தற்போதைய நிலைமையின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டின் கொள்கை இலக்கான அமெரிக்க டொலர் 4000 ஐ அடைவதற்கான சாத்தியத்தையும் உறுதிப்படுத்துகிறது.

தொழில் துறையானது 10.3 வீத வளர்ச்சியையும், சேவைகள் துறை 8.6 வீத வளர்ச்சியையும் காட்டியமை பல்வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் போற்றத்தக்கதாகும். எனினும் விவசாயத் துறை வளர்ச்சியானது 2 வீதமாகும். வருட ஆரம்பத்தில் நிலவிய மோசமான காலநிலையே இந்தப் பின்னடைவுக்கான காரணமாகும்.

நடப்பு ஆண்டு (2012) வரவு செலவுத் திட்டத்தில் காணப்பட்ட வரிக் குறைப்பின் விளைவாக நுகர்வுக்கான வருமானம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவது ஆரோக்கியமானது.

## செயற்பாடு

சபையின் அனைத்து செயற்பாடுகளும் 2011 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்கதாகவிருந்தது. அனைத்து லொத்தர்கள் தொடர்பிலும் மேம்பட்ட நிலைப் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட காலநிலை மாற்றங்கள் மற்றும் கடுமையான வெள்ளம் என்பன நிகழாமல் இருந்திருந்தால் இதைவிட மேம்பட்ட பலனை அடைந்திருக்கலாம். எனினும், 2011இன் மொத்தப் புரள்வு ரூ. 10,092 மில்லியனாகும். ஒப்பீட்டளவில் 2010இல் ரூ. 8862 மில்லியன் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது ரூ. 1229 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகிறது. முன்னைய ஆண்டை விட 13.8 வீத அதிகரிப்பைக் காணலாம். லொத்தர் சீட்டுக்கள் ரூ. 20/- ஆக விலை அதிகரிக்கப்பட்ட ஆண்டான 2008 முதல் முன்னைய ஆண்டுகள் வரையில் ஆரம்ப நிலையில் இருந்த விற்பனை அளவானது போற்றத்தக்க வகையில் அதிகரித்துள்ளது.

பெருமை மிகுந்த வரலாற்றைக் கொண்டதும் நாட்டின் மிகப் பிரபலமான சீட்டிழுக்கப்படும் (குலுக்கல்) லொத்தருமான மஹஜன சம்பதவின் டிசம்பர் மாத விற்பனை ரூ. 409.9 மில்லியனாகும். இது 2006 செப்டம்பரில் அதிகூடிய விற்பனையாகப் பதிவு செய்யப்பட்ட ரூ. 411.8 மில்லியனை அண்மித்ததாகவுள்ளது. மஹஜன சம்பத ஞாயிற்றுக் கிழமைகளில் விற்பனையில் ஒரு மில்லியன் டிக்கட்டுகளைக் கடந்து சிரம வாசனா மற்றும் சுவசெத லொத்தர்களின் கூட்டு விற்பனையான இது ஏறத்தாழ 550,000 சீட்டுக்களை விஞ்சியதாகவுள்ளது. மொத்த விற்பனைப் புரள்வில் 40.5 வீதம் மஹஜன சம்பதவுக்குரியது.

ஜாதிக சம்பத லொத்தர் விற்பனை முன்னைய ஆண்டை விட ஏறத்தாழ 60 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த டிக்கட்டின் முகத் தோற்றத்தை மாற்றி வடிவமைத்தமை இவ்வதிகரிப்புக்கு வழிகோலியது.

செவன சுரண்டல் சீட்டு டிசம்பர் மாதம் ரூ. 106 மில்லியன் விற்பனையை அடைந்தது. இந்த லொத்தர் ஈட்டிய இரண்டாவது அதிக விற்பனை இதுவாகும். இச்சுரண்டல் சீட்டின் அதிகூடிய விற்பனையான ரூ. 132 மில்லியன் 1998 ஆம் ஆண்டு ஈட்டப்பட்டது.

சபையானது ரூ. 10 மில்லியனுக்கும் அதிகமான சுப்பர் பரிசுகளை வென்ற 21 வெற்றியாளர்களை 2011ஆம் ஆண்டில் உருவாக்கியுள்ளது.இதற்கு முந்தைய ஆண்டை விட 6 வெற்றியாளர்கள் அதிகமாக உருவாக்கப்பட்டுள்ளார்கள் (2010இல் 15 சுப்பர் பரிசு வெற்றியாளர்கள் உருவாக்கப்பட்டனர்). ஒக்டோபர் மாதம் தொடர்ச்சியாக நான்கு



**"31.12.2011 அன்று முடிவடைந்த ஆண்டில் திரட்டிய இலாபமானது ரூ.1,892.8 மில்லியனாகும். இது 31.12.2010 அன்று முடிவடைந்த ஆண்டில் ரூ.1587.7 மில்லியனாகக் காணப்பட்டது."**

கணக்காய்வின் பின்னரான கணக்கறிக்கையுடன் 31.12.2011 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தமது அறிக்கையை சமர்ப்பிப்பதில் தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் குழு மகிழ்ச்சியடைகிறது.

### தொடர்ந்து செல்லுதல்

சபையானது, தேசிய லொத்தர் சபை தனது நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தொடர்ந்தும் மேற்கொள்ளத் தேவையான வளங்களைக் கொண்டிருப்பதையிட்டுத் திருப்தியடைவதுடன்,

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் பொழுது “தொடர்ந்து செல்லுதல் கோட்பாடு” உள்வாங்கப்பட்டுள்ளது.

## முதன்மைச் செயற்பாடுகள்

தேசிய லொத்தர் சபையின் முதன்மைச் செயற்பாடானது சீட்டிழுப்பு (குலுக்கல்) லொத்தர் மற்றும் சுரண்டல் லொத்தர் ஆகிய இரண்டையும் நடாத்திச் செல்லுதல் என்பதுடன் குறித்த ஆண்டில் இச் செயற்பாட்டின் இயல்பு தொடர்பில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

## செய்முறை மதிப்பீட்டு விமர்சனம்

72-75 ஆம் பக்கத்திலுள்ள தலைவரின் மீயாய்வில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய லொத்தர் சபையின் அலுவல்களைப் பற்றியும் கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற முக்கிய நிகழ்ச்சிகளையும் 96 ஆம பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திகள் பற்றிய விபரங்களும், சபையின் செயற்பாட்டு விளைவுகள் பற்றி விபரிக்கின்றன. இவ்வறிக்கைகளும் கணக்காய்வுக்கு உட்பட்ட நிதிக் கூற்றுக்களும் சபையின் பிரதிபலிக்கின்றன.(85ஆம்பக்கத்தில)

31.12.2011 அன்று முடிவடைந்த ஆண்டில் திரட்டிய இலாபமானது ரூ.1,892.8 மில்லியனாகும். இது 31.12.2010 அன்று முடிவடைந்த ஆண்டில் ரூ.1587.7 மில்லியனாகக் காணப்பட்டது.

இதன் வெட்டுப் புள்ளிகளும் நகர்வுகளும் நிதிக்கூற்றுகளில் உரிமை மூலதன மாற்றங்களுக்கான கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கமைய சபையினால் செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் சட்டரீதியான பொறுப்புகள் செலுத்தப்பட்டதாகவோ அல்லது நிதிக்கூற்றுக்களில் முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றதென பணிப்பாளர் சபை உறுதிபடுத்துகிறது.

## மனிதவளங்கள்

சபையானது ஊழியர்களுக்கு பலவிதமான சலுகைகளை வழங்குவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இச்சலுகைகள் முகாமைத்துவம் நிர்ணயிக்கும் இலக்குகளை அடைவதற்கு ஊழியர்களின் சாதகமான பங்களிப்பை ஊக்குவிக்கும். லொத்தர் விற்பனையின் அடிப்படையிலான ஊக்குவிப்புத் திட்டங்கள், மருத்துவ வசதிகள், சீருடைக் கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு ஆகியன ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளில் சிலவாகும். மாதாந்தம் சிறந்த ஊழியர் ஒருவரைத் தெரிவு செய்தல் மற்றுமொரு ஊக்குவிப்பு நடவடிக்கையாகும்.

ஊழியர்களுக்கான செயற்பாட்டு மதிப்பீட்டுப் பயிற்சிப் பட்டறைகள் தேசிய லொத்தர் சபையின் மாநாட்டு அறையிலும் கட்டுநாயக்க, டமரின்ட் ட்ரீ ஹோட்டலிலும் முறையே 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் ஜுன் மாதங்களில் நடாத்தப்பட்டன.

தேசிய லொத்தர் சபையின் வரலாற்றை விளக்கும் ஊழியர் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம் ஜுன் 2011 இல் இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. சபையானது 2011 செப்டெம்பர் 01ஆம் திகதி முதல் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை அமுல்படுத்தி, அநேகமாக அனைத்து ஊழியர்களையும் வெவ்வேறு பிரிவுகளின் செயற்பாடுகள் பற்றிய அறிமுகம் மற்றும் தேர்ச்சியைப் பெறுவதற்காக இடமாற்றம் செய்தது.

## கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு

சபையானது கூட்டாண்மை பிரதிமை விளம்பர பாதீட்டின் மூலம் கூட்டாண்மைச் சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. எமது வருமானத்தை உச்சப்படுத்துதல் எமது நோக்கமாக இருப்பினும் சமூக நலன் கருதி குறிப்பிட்ட சில திட்டங்கள் மற்றும் அனுசரணைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. அதற்கமைய, தேசத்துக்கு மகுடம் கண்காட்சி, வருடாந்த பெரஹெர உற்சவங்கள் மற்றும் பல தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளுக்கு நாம் அனுசரணை வழங்கினோம்.

## அரசுக்கான பங்களிப்பு

சபையானது திரட்டிய நிதிக்கு நேரடியாகவும் வரிகள் என்ற ரீதியில் மறைமுகமாகவும் ரூ. 2,038.6 மில்லியனை 2011ஆம் ஆண்டில் செலுத்தியது. இத்தொகையானது 2010ஆம் ஆண்டில் தொகை ரூ.2,069.2 மில்லியன் ஆக இருந்தது.

## பணிப்பாளர் சபை

மீளாய்வுக்கான ஆண்டில் சபையானது பின்வரும் அதிகாரிகளை கொண்டதாக அமைந்தது.

திரு. சமிந்த அதுளுவகே - தலைவா

திரு. ஜானக ஸ்ரீ வர்ணசிங்க - தொழிற்படுநிலைப் பணிப்பாளர்

திரு. ஆர்.ஜே.ரி.அபேவர்தன - பணிப்பாளர்

திரு. வி.எம்.அமீன் - பணிப்பாளர்

திரு. சம்பத் திசாநாயக்க - பணிப்பாளர்

திரு. சமன் கலப்பதி - அவதானிப்பாளர்

| அரசாங்கத்துக்கான செலுத்துகை | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|
| நேரடிச் செலுத்துகை | | |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | 1,345.04 | 1,173.46 |
| நம்பிக்கை நிதியத்தினூடாக | - | 146.70 |
| திறைசேரிக்கான விசேட செலுத்துகை | - | 16.00 |
| மறைமுகச் செலுத்துகை | 1,345.04 | 1,336.16 |
| பெறுமதி சேர் வரி | 365.15 | 315.51 |
| என்.பீ.ரீ | 141.76 | 186.37 |
| வருமான வரி / SRL | 186.87 | 231.39 |
| மொத்தச் செலுத்துகை | 693.78 | 733.27 |
| | 2,038.82 | 2,069.43 |

| நிதியியற் சிறப்பியல்புகள் | 2011 | 2010 | Change |
|---|---|---|---|
| புரள்வு | 10,092.33 | 8,862.86 | 1,229.47 |
| சட்டரீதியான ஒதுக்கீடுகள் | 8,077.35 | 7,107.75 | 969.60 |
| பெறுமதி சேர் வரி | 365.15 | 315.52 | 49.63 |
| தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி | 141.76 | 186.38 | (44.62) |
| பிற வருமானம் | 178.86 | 212.42 | (33.56) |
| இயங்கு செலவுகள் | 1,290.93 | 1,186.62 | 104.31 |
| வரிக்கு முன் தேறிய இலாபம் | 395.98 | 263.03 | 132.95 |
| வரிக்கு பின் தேறிய இலாபம் | 209.10 | 31.63 | 177.46 |
| வரிக்கு பின் தேறிய இலாபம | 2,967.02 | 2,702.80 | 264.22 |
| மொத்தச் சொத்துக்கள் | 1,892.80 | 1.587.77 | 305.03 |
| மொத்த தேறிய சொத்துக்கள் / பங்குகள% | 3.92% | 2.97% | - |
| புரள்விற்கு வரிக்கு முந்தைய தேறிய இலாபம் % | 13.34% | 9.73% | - |
| பங்குகளுக்கு வரிக்கு முந்தைய தேறிய இலாபம் % | 20.92% | 16.56% | - |
| பங்குகளின் விகிதாசாரம | 2.55 :1 | 2.23:1 | - |

மீளாய்வுக்கான ஆண்டில் சபையானது ரூ. 39.6 மில்லியனை முதலீடு செய்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் (2010) இத் தொகையானது தொகை ரூ. 22.1 மில்லியனாகும்.

மீளாய்வுக்கான மொத்த இயங்கு செலவானது ரூ. 1,290.9 மில்லியனாகும். அதற்கு முந்தைய ஆண்டில் இது ரூ.1186.6 மில்லியனாகும். ஒப்பீட்டளவில் 8.7மூ அதிகரிப்பாகும். இது மொத்தப் புரள்வில் 12.7மூ என்பதுடன் முன்னைய ஆண்டில் இது 13.3மூ ஆகவிருந்தது. இயங்கு செலவுகள் முன்னைய ஆண்டை விட 8.7மூ ஆல் அதிகரித்துள்ள போதும் விற்பனையின் விகிதத்தில் குறைந்துள்ளமை மூலம் சாதகமான பலன்களை ஏற்படுத்தியுள்ளது.

## முடிவுரை

தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர்கள், முகாமைத்துவக் குழுவுக்கும் அனைத்து ஊழியர்களுக்கும் சிறந்த பலன்களை அடைவதற்கான அவர்களது அர்ப்பணிப்பு, விசுவாசம், ஆக்கத்திறன் மற்றும் கடின உழைப்பு ஆகியவற்றுக்காக தமது நன்றியைத் தெரிவிக்கின்றது.

தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கும் மாவட்ட விற்பனையாளர்கள், முகவர்கள், மக்கள் வங்கி, வழங்குனர்கள், அச்சகத்தினர் மற்றும் கணக்காய்வாளர்களுக்கும் அர்ப்பணிப்பு, விசுவாசத்துடனான சிறந்த சேவையாற்றியமைக்கு சபை நன்றி தெரிவித்துக் கொள்கிறது.



ஜானக ஸ்ரீ வர்ணசிங்க,
தொழிற்படும் பணிப்பாளர்,
தேசிய லொத்தர் சபை,
30 மார்ச் 2012,
கொழும்பு.

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

## மேலோட்டம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது 2005 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது முதல் பெறுமதிமிக்க சேவையாற்றி வருகின்றது. இக்குழுவானது 2011ஆம் ஆண்டில் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாக மீளமைக்கப்பட்டது.

திரு. ஆர்.ஜே.ரி.அபேவர்தன - தலைவர்
(நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்)

திரு. வி.எம். அமீன் -அங்கத்தவர்
(திறைசேரி பிரதிநிதி - நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்)

திரு. எஸ். திசாநாயக்க - அங்கத்தவர்
(நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்)

திருமதி. எஸ். பாலசூரிய - செயலாளர்
(உதவிப் பொதுக் குழுவின் முகாமையாளர் - சட்டம்.`.சபைக் குழுவின் செயலாளர்)

## அவதானிப்பாளர்கள்

வரையறுக்கப்பட்ட பி. விஜேவர்தன ரூ கம்பனி - உள்ளகக் கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் நாயகம் திணைக்கள பிரதிநிதி

2011ஆம் ஆண்டில் குழுவானது காலாண்டுக்கு ஒரு முறையே சந்திக்க வேண்டி இருந்த பொழுதும் 8 தடவைகள் சந்தித்தது. பொது முகாமையாளரும், தலைமை நிதியியல் அலுவலரும் அழைப்பின் அடிப்படையில் சமூகமளித்தனர். ஏனைய முகாமைத்துவத்தினர் விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்காகவும் தேவைப்படும் பொழுதும் அழைக்கப்பட்டனர்.

## பொறுப்புக்கள்

கணக்காய்வுக் குழுவானது இணங்கி நடத்தல், அனுசரித்துப்போதல், செயற்பாடு ஆகியவற்றுக்கிடையில் சமநிலையைப் பேண சபைக்கு உதவுகிறது. நிதிக்கூற்றுகளின் நேர்மைத்தன்மை, நற்பயன் தரக்கூடிய கட்டுப்பாட்டுச் சூழ்நிலை, குறிக்கோளை அடைதல் மற்றும் உள்ளக – வெளியகக் கணக்காய்வாளர்களின் சுதந்திரம் போன்றவற்றை உறுதிபடுத்தவதற்கு சபைக்கு உதவி செய்வதே இக்குழுவின் நோக்கமாகும்.

இக்குழு நிதிக்கூற்றுக்கள் மற்றும் வெவ்வேறு அறிக்கைகளை மீள்பார்வை செய்து, தேவையான பொழுது பரிந்துரைகளை மேற்கொள்ளும். நிதிக்கூற்றுகள் தயாரிக்கும் பொழுது அவற்றின் முறையான சமர்ப்பிப்பு மற்றும் அவற்றில் முக்கியமான கணக்கியல் கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றனவா என்பவை தொடர்பிலும் கவனஞ் செலுத்தும்.

இக்குழு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், வெளியகக் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தீர்வுகாண முடியாமல் இருக்கும் பிரச்சினைகளை மீள்பார்வை செய்து தகுந்த பரிந்துரைகளை மேற்கொள்ளும். ஒவ்வொரு கூட்ட கலந்துரையாடற் குறிப்புகளும், சபை மட்டத்தில் மேலதிக மீள்பார்வைக்காகச் சமர்ப்பிக்கப்படும்.

பலம் வாய்ந்த உள்ளக ஒழுங்கு முறைகளில் முன்னேற்றம் மற்றும் சுற்றுப்புர கட்டுப்பாடு ஆகியவற்றை உறுதி செய்யும் பொருட்டு, உள்ளகக் கணக்காய்வாளர்களின் பரிந்துரைகள் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ள உள்ளகக்கட்டுப்பாடுகள், சபையால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

உள்ளகக் கணக்காய்வு செயற்பாடானது முன்னணி கணக்காய்வு நிறுவனம் ஒன்றிடம் மேலதிக சுதந்திரம் கருதி ஒப்படைக்கப்பட்டுள்ளது. கணக்காய்வுப் பரிந்துரைகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதை அறிய தொடர் மீளாய்வுகள் திட்டமிடப்பட்டன.

தனது பணிகளையும் பொறுப்புகளையும் திறமையாக நிறைவேற்றுவதை சாத்தியமாக்க இவ்வருட காலப்பகுதியில், குழுவானது நிர்வாகத்திடமிருந்து தகவல்களையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டது.

## இணக்கம்

சபையின் செயற்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கியல் கொள்கைகள் அலுவல்கள் நியாயமாக, நம்பகத்தன்மையுடன் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளின்படியும் திருப்திகரமாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பில் கணக்காய்வுக் குழுவானது திருப்தியடைகிறது.

ஆர்ஜேரிஅபேவர்தன,
தலைவர்,
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு,
தேசிய லொத்தர் சபை,
30 மார்ச் 2012,
கொழும்பு

# நிதிக் கூற்றுகள் மற்றும் தகவல்கள்



## டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று

| | குறிப்பு | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| புரள்வு பெறுமானம் சேர் வரி அடங்கலாக | 01 | **10,092,330,623** | **8,862,869,826** |
| குறை: முகவர் தரகு | 02 | 1,874,354,373 | 1,638,501,705 |
| அறிவிக்கப்பட்ட பரிசுகள் | 03 | 4,857,951,333 | 4,295,786,207 |
| திரட்டிய நிதியத்துக்கான பங்களிப்பு | 04 | 1,345,046,907 | 1,173,460,051 |
| பெ.சே.வரிக்கு முன்னர் சபையின் வருமானம் | | **2,014,978,010** | **1,755,121,863** |
| குறை: பெறுமதி சேர்வரி | | 365,159,981 | 315,515,516 |
| தேசத்தைக் கட்டி எழுப்பும் வரி | | 141,767,911 | 186,375,756 |
| பெ.சே.வரியின் பின்னர் சபையின் தேறிய வருமானம் | | **1,508,050,118** | **1,253,230,591** |
| கூட்டு: பிறவருமானம | | 178,866,138 | 212,424,233 |
| கழி : செலவுகள் | | | |
| விநியோகச் செலவினங்கள் | 05 | 12,429,908 | 7,992,173 |
| நிர்வாகச் செலவுகள் | 06 | 302,061,060 | 292,493,432 |
| பிற செலவுகள் | 07 | 950,635,412 | 856,202,031 |
| நிதிச் செலவுகள் | | 25,807,844 | 29,936,142 |
| மொத்தச் செலவுகள் | | **1,290,934,224** | **1,186,623,778** |
| கழி : திறைசேரிக்கு செலுத்தப்பட்ட விசேட வரி | | - | 16,000,000 |
| வரியிடலின் முன்னான நிகர மிகை | | **395,982,032** | **263,031,046** |
| கழி : வரியிடலுக்கான ஏற்பாடு | | 186,878,002 | 231,393,156 |
| ஆண்டுக்கான நிகரமிகை | | **209,104,029** | **31,637,890** |

## டிசம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான ஐந்தொகை

| | Note | 2011<br>ரூ. | 2010<br>ரூ. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள | | | |
| ஆதனம், இயந்திரம் மற்றும் உபகரணம் | | 387,408,346 | 383,088,713 |
| குத்தகைச் சொத்து | | 795,016 | 757,620 |
| மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள | | **388,203,362** | **383,846,333** |
| மூலதனக் குறை வேலை – கட்டிடம் | | 5,331,951 | - |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| பதிவேட்டுப் பொருட்கள் / இருப்புக்கள் | 08 | 71,715,536 | 71,799,991 |
| வர்த்தகம் பிற வருமதிகளும் | 09 | 170,596,728 | 206,637,373 |
| வைப்புகளும் முற் கொடுப்பனவுகளும் | | 10,638,724 | 6,180,673 |
| காசும் காசுக்குச் சமமானவைகளும | | 2,320,535,435 | 2,034,333,063 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | **2,573,486,423** | **2,318,951,101** |
| மொத்தச் சொத்துக்கள் | | **2,967,021,736** | **2,702,797,434** |
| பங்குகளும் பொறுப்புகளும் | | | |
| பங்குடமையாளர்கட்கு பங்குக் காரணம் கொள்ளக்கூடியது | | | |
| ஒதுக்கங்கள் | | 1,892,802,542 | 1,587,766,210 |
| மொத்தப் பங்குடமையாளர்கட்குப் பங்குக் காரணம் கொள்ளக்கூடியது | 10 | **1,892,802,542** | **1,587,766,210** |
| நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | | | |
| பணிக்கொடைக்காகிய ஏற்பாடு | | 53,569,595 | 62,075,804 |
| பிற்போடப்பட்ட வரி | | 14,787,878 | 15,953,117 |
| மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | | **68,357,473** | **78,028,921** |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| செலுத்த வேண்டியவை | 11 | 783,875,058 | 718,990,586 |
| பெசேவ மற்றும் தேகவ | | 32,679,128 | 32,900,264 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | | 22,630,707 | 137,514,156 |
| திரண்ட செலவுகள் | | 166,676,830 | 147,597,297 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | **1,005,861,722** | **1,037,002,303** |
| மொத்த பொறுப்புக்கள் | | **1,074,219,196** | **1,115,031,224** |
| மொத்த பங்குகளும் பொறுப்புகளும | | **2,967,021,737** | **2,702,797,434** |

இந் நிதிக் கூற்றுக்களின் அவசியமான பகுதிகள் 05 தொடக்கம் 25 ஆம் பக்கங்களில் உள்ள கொள்கைகள் மற்றும் குறிப்புகளில் வழங்கப்பட்டுள்ளன. இந் நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் அளிக்கை பணிப்பாளர் சபையினரின் பொறுப்பாகும்.

சமிந்த அதுளுவகே
தலைவர்
29.02.2012

ஜானக ஸ்ரீ வர்ணசிங்க
தொழிற்படுநிலைப் பணிப்பாளர்

ஹர்ஷ பண்டார
தலைமை நிதியியல் அலுவலர்

## 31 டிசம்பர் 2011இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சலின் கூற்று.

| | 2011<br>ரு. | 2010<br>ரு. |
|---|---|---|
| செயற்படு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம் | 395,982,032 | 263,031,046 |
| குறை:கடந்த காலத்துக்கான சரிசெய்தல்களுக்கானவை- தகவல தொழிநுட்பத்துக்கான ஒதுக்கீடு | 33,859,196 | - |
| அரச நிறுவனங்களிலான நம்பிக்கை நிதிய வைப்புகளிலிருந்து திரட்டிய நிதிக்கான மாற்றங்கள் | - | (24,948,982) |
| பரிசுகள் ஒதுக்கத்தின் அதிகரிப்பு / குறைவு | 62,073,107 | (24,189,783) |
| கட்டிட ஒதுக்கத்தின் அதிகரிப்பு / குறைவு | - | (38,157,266) |
| | **491,914,335** | **175,735,015** |
| சரி செய்தல்களுக்கானவை | | |
| தேய்மானம் | 35,522,247 | 48,204,463 |
| பணிக்கொடைக்காகிய ஒதுக்கம் | 3,620,091 | 29,653,729 |
| பெறுமதி சேர் வரிக்கான ஒதுக்கம் | 506,927,892 | 501,891,271 |
| ஆதனம், இயந்திரம், மற்றும் உபகரணத்தை அகற்றுவதற்கான இலாபம் | (2,583,438) | (2,760,280) |
| பரிசுகளுக்கான ஒதுக்கீடு | 4,857,951,333 | 4,295,786,207 |
| திரண்ட நிதியத்துக்கான ஒதுக்கீடு | 1,345,046,907 | 1,173,460,051 |
| | **7,238,399,366** | **6,221,970,456** |
| செயற்படு மூலதனத்தின் மாற்றங்கள் | | |
| பொருட்பதிவேடு / இருப்புகளின் அதிகரிப்பு /குறைவு | 84,455 | (6,464,732) |
| பொதுத் திறைச்சேரி – கட்டட நிதியத்தின் அதிகரிப்பு / குறைவு | - | 24,945,898 |
| வர்த்தகம் மற்றும் பிற வருமதிகளின் அதிகரிப்பு / குறைவு | 36,040,645 | (24,069,758) |
| வைப்பு மற்றும் பிற முற் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு / குறைவு | (4,458,052) | (431,178) |
| செலுத்த வேண்டியவற்றின், திரண்ட செலவுகளின் அதிகரிப்பு / குறைவு | 2,490,525 | 40,557,400 |
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய பாய்ச்சல் | **7,272,556,940** | **6,256,508,086** |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்களின் சேர்ப்புகள் | (45,211,227) | (22,166,974) |
| ஆதனம் இயந்திரம் மற்றும் உபகரணத்தை அகற்றுதல் மூலமான ஆதாயங்கள் | 2,583,438 | 3,950,282 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | **(42,627,790)** | **(18,216,692)** |
| நிதிசார் நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல் | | |
| திரண்ட நிதியத்துக்குச் செலுத்திய கொடுப்பனவுகள் | (1,273,728,511) | (1,136,903,820) |
| செலுத்திய பரிசு | (4,847,796,249) | (4,311,011,946) |
| பணிக்கொடைக் கொடப்பனவு | (12,126,300) | (5,769,850) |
| பெசேவ மற்றும் தேசுவ கொடுப்பனவு | (507,149,028) | (498,383,096) |
| வருமானவரிக் கொடுப்பனவு | (302,926,691) | (189,083,135) |
| நிதிசார் நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் | **(6,943,726,779)** | **(6,141,151,847)** |
| குறித்த ஆண்டில் காசும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள் | 286,202,372 | 97,139,547 |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவைகளும் | 2,034,333,063 | 1,937,193,516 |
| ஆண்டு முடிவில் காசும் காசுக்குச் சமமானவைகளும் | **2,320,535,435** | **2,034,333,063** |
| காசும் காசுக்குச் சமமானவைகளும் | **2011** | **2010** |
| குறுகிய கால முதலீடுகள் | 2,095,122,234 | 1,917,456,521 |
| கையிலிருக்கும் காசும் வங்கியிலிருக்கும் காசும் | 225,413,201 | 116,876,542 |
| ஆண்டு முடிவில் தேறிய காசும் காசுக்குச் சமமானவைகளும் | **2,320,535,435** | **2,034,333,063** |

## டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான பங்குகளின் மாற்றங்களின் கூற்று

| | கட்டிட ஒதுக்கம் ரூ. | பரிசுகள் ஒதுக்கம் ரூ. | வருமான ஒதுக்கம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|
| 01.01.2009இல் இருந்தவாறான நிலுவை | **657,000,000** | **708,827,935** | **277,596,416** | **1,643,424,351** |
| பரிசு ஒதுக்கீட்டின் மீதியின் நிகர மாற்றம் | - | 59,462,686 | - | 59,462,686 |
| திரட்டிய நிதியத்துக்கு மாற்றியது எஸ்ஜரிஎஸ்ரி நிதியத்திலிருந்து | (38,157,266) | (83,652,469) | (24,948,982) | (146,758,717) |
| 2010க்கான நிகர மிகை | - | - | 31,637,890 | 31,637,890 |
| 31.12.2010இல் இருந்தவாறான நிலுவை | **618,842,734** | **684,638,152** | **284,285,324** | **1,587,766,210** |
| பரிசு மீதியின் நிகர மாற்றம | - | 62,073,107 | - | 62,073,107 |
| மேலதிக வருமான வரி ஒதுக்கம் | - | - | 33,859,196 | 33,859,196 |
| 2011க்கான நிகர மிகை | - | - | 209,104,029 | 209,104,029 |
| 31.12.2011இல் இருந்தவாறான நிலுவை | **618,842,734** | **746,711,259** | **527,248,549** | **1,892,802,542** |

| குறிப்பு 01 – புரள்வு | 2011 ரூ. | 2010 ரூ. |
| --- | --- | --- |
| மஹஜன சம்பத | 4,094,195,000 | 3,501,117,200 |
| வாசனா சம்பத | 1,080,006,800 | 969,626,200 |
| கொவிசெத | 1,285,523,000 | 1,148,930,400 |
| சுபிரி வாசனா சம்பத | 1,820,857,400 | 930,481,800 |
| ஜயவிரு | 153,484,400 | 805,344,400 |
| சிரம வாசனா | - | 49,088,200 |
| சுவசெத | - | 80,860,800 |
| ஜாதிக சம்பத | 786,494,800 | 492,754,800 |
| கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ | - | 34,252,526 |
| நியூ எயர்போர்ட் லொத்தர் | 5,092,723 | - |
| சமுர்தி | 95,606,020 | 96,543,250 |
| செவன | 771,070,480 | 753,870,250 |
| மொத்தம் | **10,092,330,623** | **8,862,869,826** |

| குறிப்பு 02 – முகவர் தரகு | 2011 ரூ. | 2010 ரூ. |
| --- | --- | --- |
| மஹஜன சம்பத | 767,619,363 | 656,391,062 |
| வாசனா சம்பத | 202,492,378 | 181,759,984 |
| கொவிசெத | 241,024,094 | 215,401,995 |
| சுபிரி வாசனா சம்பத | 341,392,113 | 174,419,888 |
| ஜயவிரு | 28,777,885 | 150,984,226 |
| சிரம வாசனா | - | 9,202,361 |
| சுவசெத | - | 15,157,508 |
| ஜாதிக சம்பத | 147,460,416 | 92,383,490 |
| நியூ எயர்போர்ட் லொத்தர் | 85,347 | - |
| சமுர்தி | 15,105,863 | 15,253,844 |
| செவன | 130,396,914 | 127,547,350 |
| மொத்தம் | **1,874,354,373** | **1,638,501,708** |

| குறிப்பு 03 – அறிவிக்கப்பட்ட பரிசுகள் | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|
| மஹஜன சம்பத | 2,006,155,550 | 1,715,645,948 |
| வாசனா சம்பத | 507,603,196 | 463,757,320 |
| கொவிசெத | 604,195,810 | 550,367,835 |
| சுபிரி வாசனா சம்பத | 855,989,748 | 445,379,022 |
| ஜயவிரு | 72,137,668 | 385,267,208 |
| சிரம வாசனா | – | 25,034,982 |
| சுவசெத | – | 41,239,008 |
| ஜாதிக சம்பத | 369,652,556 | 235,219,060 |
| கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ | – | 11,723,123 |
| நியூ எயர்போர்ட் லொத்தர் | 3,837,000 | – |
| சமுர்தி | 46,846,950 | 47,517,173 |
| செவன | 391,532,855 | 374,635,529 |
| மொத்தம் | **4,857,951,333** | **4,295,786,207** |

| குறிப்பு 04 – திரட்டிய நிதியம் | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|
| மஹஜன சம்பத | 675,542,175 | 577,684,338 |
| வாசனா சம்பத | 178,201,122 | 159,988,323 |
| கொவிசெத | 128,552,300 | 114,893,040 |
| சுபிரி வாசனா சம்பத | 182,085,740 | 93,048,180 |
| ஜயவிரு | 15,348,440 | 80,534,440 |
| சிரம வாசனா | – | 4,908,820 |
| சுவசெத | – | 8,086,080 |
| ஜாதிக சம்பத | 78,649,480 | 49,275,480 |
| சமுர்தி | 9,560,602 | 9,654,325 |
| செவன | 77,107,048 | 75,387,025 |
| மொத்தம் | **1,345,046,907** | **1,173,460,051** |

| குறிப்பு 05 – விநியோகச் செலவு | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|
| சீட்டுக்கள் ஏற்றி இறக்கற் செலவுகள் | 4,702,971 | 4,368,443 |
| முகவர் உதவி / திருப்பப்பட்ட சீட்டுக்களுக்கான செலவு | 501,273 | 1,761,730 |
| மாவட்ட விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் பயிற்சி | 25,675 | – |
| முகவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில | 959,000 | – |
| மாவட்ட விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 2,817,228 | – |
| முகவர்களுக்கான மேலதிக விற்பனைக் கொடுப்பனவு | 2,268,000 | 1,862,000 |
| முகவர் மருத்துவச் செலவுகள | 1,155,761 | – |
| மொத்தம் | **12,429,908** | **7,992,173** |

| குறிப்பு 06 – நிர்வாகச் செலவுகள் | 2011<br>ரூ. | 2010<br>ரூ. |
|---|---|---|
| பணியாளர் சம்பளங்கள் | 203,294,269 | 203,535,560 |
| ஏனைய நிர்வாகச் செலவுகள் | 98,766,791 | 88,957,872 |
| மொத்தம் | **302,061,060** | **292,493,432** |

| குறிப்பு 07 – பிற செலவுகள் | 2011<br>ரூ. | 2010<br>ரூ. |
|---|---|---|
| தாபனச் செலவுகள் | 54,735,284 | 69,841,336 |
| சீட்டுக்கள் அச்சடித்த கட்டணங்கள் | 376,528,826 | 293,504,383 |
| சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு | 496,428,627 | 470,189,405 |
| தொடர்பாடற் செலவுகள் | 22,942,675 | 22,666,907 |
| மொத்தம் | **950,635,412** | **856,202,031** |

| குறிப்பு 08 – பொருட் பதிவேடுகள் / இருப்புக்கள் | 2011<br>ரூ. | 2010<br>ரூ. |
|---|---|---|
| அச்சிடப்பட்ட சீட்டுக்கள் | 48,857,409 | 45,869,797 |
| கடதாசி மற்றும் எழுதுகருவி | 2,457,918 | 1,794,429 |
| பரிசுகள் | 19,342,943 | 23,221,954 |
| நுகர்வுக்கானவை | 1,002,766 | 836,812 |
| முகவர்களுக்கான கணனி இருப்புக்கள | 54,500 | 77,000 |
| மொத்தம் | **71,715,536** | **71,799,991** |

| குறிப்பு 09 – வர்த்தகம் மற்றும் பிற வருமதிகள | 2011<br>ரூ. | 2010<br>ரூ. |
|---|---|---|
| அதிர்ஷ்ட இலாப / வர்த்தகக் கடனாளிகள | 46,868,675 | 62,696,832 |
| திரும்பிய காசோலைகள் - செவன மற்றும் சமுர்தி | 1,405,967 | 1,490,445 |
| | 48,274,642 | 64,187,277 |
| கழி – ஐயக் கடன் ஏற்பாடுகள | (29,403,277) | (29,453,197) |
| | 18,871,365 | 34,734,080 |
| பிற கடனாளிகளும் வருமதிகளும் | 48,708,636 | 30,241,167 |
| கணக்கு வருமதிகள் | 32,655,029 | 52,520,085 |
| பணியாளர் கடன்கள் | 96,594,542 | 101,441,788 |
| நிறுத்தி வைத்த வருமானச் செலவு - சிஏஸ்டி மற்றும் என்எல்ஏ | (26,232,843) | (12,299,745) |
| மொத்தம் | **170,596,728** | **206,637,373** |

| குறிப்பு 10 – ஒதுக்கங்கள | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|
| கட்டிட ஒதுக்கம் | 618,842,734 | 618,842,734 |
| பரிசு ஒதுக்கம் | 746,711,260 | 684,638,153 |
| வருமான ஒதுக்கம் | 527,248,549 | 284,285,324 |
| மொத்தம் | **1,892,802,542** | **1,587,766,211** |

| குறிப்பு 11 – செலுத்த வேண்டியவை | 2011 ரூ. | 2010 ரூ. |
|---|---|---|
| திரட்டிய நிதியத்துக்கு செலுத்த வேண்டியவை | 214,388,391 | 143,069,995 |
| முன்னரே பெற்ற அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்கள | 84,466,045 | 83,429,479 |
| பரிசுகளின் கடப்பாடுகள் | 433,573,272 | 423,418,188 |
| வர்த்தகம் மற்றும் பிற செல்மதியாளர்கள் | 51,447,351 | 69,072,924 |
| மொத்தம் | **783,875,058** | **718,990,586** |

## 1. பொதுக் கணக்கீட்டு மரபு

### 1.1.1

நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கும் தரங்களுக்கும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் விதிகளுக்கும் அமையத் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்காகச் சரிக்கட்டல்கள் செய்யப்படாது வரலாற்றுச் செலவின அடிப்படையில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 1.1.2 செவன லொத்தர்

வீடமைப்பு அமைச்சின் கீழ் இருந்த செவன லொத்தர் 1997 நவம்பர் 07ஆம் திகதி முதல் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் தேசிய லொத்தர் சபைக்கு ஒதுக்கப்பட்டது. செவன லொத்தரைத் தேசிய லொத்தர் சபைக்கு இணைப்பதற்குப் பதிலாக அது தேசிய லொத்தர் சபையின் உற்பத்திகளில் ஒன்றென இணங்காணப்பட்டு கணக்கீடும் அதற்கிணங்க மேற்கொள்ளப்படுகிறது.

பொருத்தமானவிடத்து தேசிய லொத்தர் சபையின் நிதிக் கூற்றுக்களில் போதுமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.1.3 நிதியாண்டு

நிதிக்கூற்றுக்கள் 2011 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நாட்காட்டி ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.1.4 ஒப்பீட்டுத் தகவல்

ஒப்பீட்டு நோக்கங்களுக்காக தேவையானவிடத்து முந்திய ஆண்டின் தொகைகள் மீண்டும் தரப்பட்டுள்ளன.

## 1.2. பெறுமதி மதிப்பீட்டில் சொத்துக்களும் அடிப்படைகளும்.

### 1.2.1 சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம

சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணம் அவற்றின் கொள்விலையில் திரண்ட தேய்மானத்தைக் கழித்துக் கூறப்பட்டுள்ளது. சொத்துக்களின் செலவானது சொத்துக்களை அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற பயனை அடைவதற்காக இயக்குவதற்கான செலவுடனான கையகப்படுத்துதல் மற்றும் கட்டுமான செலவாகும்.

வியாபாரத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்கு அல்லது வியாபாரத்தின் ஈட்டும் தன்மையை அதிகரிக்கும் நோக்கத்திற்காக நிலையான தன்மையையுடைய சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், விரிவுபடுத்தல் அல்லது மேம்படுத்தலுக்காக மேற்கொண்ட செலவுகள் மூலதனச் செலவுகள் எனக் கணிக்கப்பட்டுள்ளன.

### 1.2.2 குத்தகைச் சொத்து

குத்தகைக்குப் பெற்றுக்கொண்ட சொத்தின் பெறுமதி இலங்கை கணக்கீட்டு தத்துவங்களின் 19ஆவது சரத்துப் பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பெறுமதியானது எஞ்சியிருக்கும் குத்தகைக் காலப்பகுதி அல்லது அதன் பயனுள்ள வாழ்நாள் காலப்பகுதி இரண்டில் எது குறைவானதோ அதற்கிணங்க வகுக்கப்படுகிறது.

நடைமுறையல்லாத சொத்தானது அநுராதபுரத்தில் அமைந்துள்ள குத்தகைச் சொத்தை உள்ளடக்கியுள்ளது. சபையானது 1986 ஆம் ஆண்டு 30 வருட குத்தகைக்கு எடுக்கப்பட்ட காணியில் விருந்தினர் விடுதியாக ஒரு கட்டிடத்தை அமைத்தது.

#### 1.2.2.1 மீளமைப்புச் செலவினம்

தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட செயற்பாட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதார நன்மைகளைப் பேணுவதற்காகச் சொத்து, இயந்திரம் மற்றும் திருத்தங்கள் அல்லது பேணுதல்கள் மேற்கொள்ளப்படும் பொழுது அவை செலவுகளாக ஏற்றுக் கொள்ளப்படும்.

#### 1.2.2.2 தேய்மானம்

இறையில் நிலம் நீங்கலாக சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட உபயோகமான பொருளியல் சீவிய காலத்துக்கும் மேலாக அத்தொகைகளை எழுத்தழிப்புச் செய்வதற்கென எல்லாச் சொத்துக்கள், பொறித்தொகுதியும் சாதனங்களும் அவற்றின் ஆகு செலவு மதிப்பீடு என்பவற்றுக்கு நேர்கோட்டு முறையை உபயோகித்து தேய்மானத்துக்கான ஏற்பாடு கணிப்பிடப்படுகிறது.

சொத்துக்களின் தேய்மான வீதங்கள் வருமாறு:

| சொத்துக்கள் | தேய்மானம % |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| கணினிகள | 25 |
| காற்றுச் சீராக்கிகள், பொது மற்றும் அலுவலகச் சாதனம | 20 |
| குலுக்கும் பீப்பாய்கள் / லொத்தர் சாதனம | 20 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 |
| கட்டடங்களும் மறைப்புகளும் | 05 |

பயனுள்ள சீவியக்காலம், எஞ்சியவற்றின் பெறுமானங்களும் சொத்துக்களின் தேய்மான முறைகளும் மீளாய்வு செய்யப்பட்டு தேவை ஏற்படுமிடத்து ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், சீராக்கம் செய்யப்படுகின்றது.

30 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பெறப்பட்ட சொத்து (அநுராதபுர விடுதி) 2011 இலிருந்து எஞ்சியிருக்கும் ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு சமமான வகையில் வகுக்கப்பட்டுள்ளது.

### 1.2.3 பொருட்பதிவேடுகள்

கொள்வனவு விலையில் பதிவேட்டுப் பொருட்கள் மதிப்பிடபடுகின்றன. கொள்விலை முதல் வந்து முதற் சென்றது அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதுடன் அவை தற்போதைய இடத்துக்கும் நிலைக்கும் கொண்டு வருவதற்கான கொணர்வு விலையையும் பிற இடர்நேர் செலவுகளையும் உள்ளடக்கும்.

### 1.2.4 வர்த்தகம் மற்றும் பிற வருமதிகள்

கடன்பட்டோர்கள், அவை கிடைக்கக்கூடிய தொகைகளிற் குறிப்பிடப்பட்டுள்ளன. அறவிடமுடியாக் கடன்களுக்கும் ஐயக்கடன்களுக்கும் போதுமான ஒதுக்கீடகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய் வருமதிகளும் நிலுவைகளும் கொள்விலையிற் குறிப்பிடப்பட்டள்ளன.

### 1.2.5 காசும் காசுக்குச் சமனானவைகளும

#### 1.2.5.1

பெறுமதியின் மாற்றங்களின் முக்கியத்துவமற்ற ஆபத்துக்களுக்கு அமைய கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் குறுகிய கால அதி திரவத்தன்மையிலான, அறியப்பட்ட தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய முதலீடுகளும் காசும் காசுக்குச் சமமானவைகள் என வரையறை செய்யப்படும்.

#### 1.2.5.2

திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், திறைசேரி முதலீடுகள் மற்றும் வங்கி நிலையான வைப்புகளாகிய குறுகிய கால முதலீடுகள் கொள்விலையிலும் ஐந்தொகைத் திகதியில் கிடைக்க வேண்டிய வட்டியையும் சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனைத்து முதலீடுகளும் குறுகிய காலத்துக்குரியனவாகக் கருதப்படுகின்றன.

## 1.3. பொறுப்புகளும் ஒதுக்கீடுகளும்

### 1.3.1 பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் பொழுது கணக்கீடு செய்யப்பட்ட அறியப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களும்.

### 1.3.2 நடைமுறைப் பொறுப்புக்கள்

ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்பட்டு, கோரப்படும் பொழுது செலுத்தப்பட வேண்டிய அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குள் செலுத்தப்பட வேண்டியவை பொறுப்புக்கள் ஆகும்.

### 1.3.3 நடைமுறையல்லாத பொறுப்புக்கள்

நடைமுறையல்லாத பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்பட்டிருப்பவை, ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டு காலத்தக்குப் பின்னர் செலுத்தப்பட வேண்டியவையாகும்.

### 1.3.4 இளைப்பாறும் பொழுதான ஓய்வு கால நன்மைகள

#### 1.3.4.1 வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊசேநி ரூ ஊநநி

ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கும் தகுதியுள்ள அனைத்துப் பணியாளர்களும் இதற்கு உரித்துடையோர் என்பதுடன் இதனுடன் தொடர்புடைய சட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் அமையப் பொருத்தமான பங்களிப்பு நிதியத்தினால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்குச் செய்யப்படும் பங்களிப்புகள் வருமானக் கூற்றில் செலவாகக் காட்டப்பட்டுள்ளன.

### 1.3.4.2 வரையறை செய்யப்பட்ட திட்டம் இளைப்பாறும் பணிக்கொடை

சபையுடன் ஓராண்டு தொடர்ச்சியான சேவையைப் பூர்த்தி செய்த அனைத்துப் பணியாளர்கட்கும் 1982ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிக்கொடை அதிகாரச் சட்டத்தின் விதிகளின் கீழ் இளைப்பாறும் பணிக்கொடைகளுக்காகிய ஏற்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நிபுணர் ஒருவரிடமிருந்து பகுப்பாய்வு செய்யப்பட்ட புள்ளிவிபர அறிக்கையொன்றைப் பெறுவதற்குச் சபை எண்ணியுள்ளதுடன் எஸ்எல்ஏஎஸ் 16 இனால் பரிந்துரைக்கப்பட்ட எதிர்வுகூறப்படும் அலகுக்கடனைப் பயன்படுத்தி பணிக்கொடைக்காகிய ஏற்பாடு மேற்கொள்ளப்படும்.

நடப்பாண்டில் ரூ.3,620,091/- வழங்கப்பட்டது. இது கடந்த ஆண்டு ரூ.29,653,729/- ஆகவிருந்தது. இது 2010ஆம் ஆண்டு முதன்முறையாக பியூசி முறையைப் பயன்படுத்தி கொண்டு வரப்பட்டு கணக்கு வைக்கப்பட்டது.

### 1.3.5 வர்த்தகம் மற்றும் பிற செலுத்த வேண்டியவை

வியாபாரம் மற்றும் பிறசெலுத்த் வேண்டியவை கொள்விலையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 1.4. வரியிடல்

### 1.4.1 நடைமுறை வரிகள்

நிதிக்கூற்றுக்களில் அறிக்கை செய்யப்பட்டது போன்று வரவு மற்றும் செலவுக் கூறுகளின் அடிப்படையில் வருமான வரிக்காகிய ஏற்பாடு செய்யப்படுவதுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் விதிகளுக்கு இணங்கக் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

### 1.4.2 பிற்போடப்பட்ட வரியிடல்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரி அடிப்படைகளுக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக மேற்கொண்டு செல்லும் தொகைகளுக்கும் இடையில் ஐந்தொகையில் உள்ள அனைத்துத் தற்காலிக வித்தியாசங்களின் மேலும் பொறுப்புக்கள் முறையைப் பயன்படுத்தி வருமான வரிக்காகிய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.5. எதிர்பாராக் கடன் பொறுப்புகள

### 1.5.1 திரண்ட நிதியத்துக்குச் செலுத்திய பங்களிப்புக்கான வரி

சபை 2007/2008,2008/2009,2009/2010ஆம் மதிப்பீட்டு ஆண்டுக்கென திரட்டிய நிதிக்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 2.8 பில்லியன் வருமான வரிக்கான மேலதிக மதிப்பீடாக ரூ.339,107,797 பெற்றுக்கொண்டது. சபை மேற்குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டுக்கு எதிராகப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தக்கூடாக மேன்முறையீடு செய்துள்ளது. இம்முறையீட்டுக்கான தீர்வு எதிராக அமைந்தால் ரூ. 1.1 பில்லியனை சபை செலுத்த வேண்டியிருக்கும்.

### 1.5.2 கோரப்பட்ட பரிசுகள்

ஏற்கனவே மற்றொருவரால் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு பரிசுப் பணம் வழங்கப்பட்ட லொத்தர் சீட்டு ஒன்று தொடர்பில் வெற்றியாளர் ஒருவரால் தொடரப்பட்ட வழக்கில் ரூ.2,000,000.00 அவ்வெற்றியாளருக்குச் சபை செலுத்த நேரிடலாம்.

## 1.6. வருமானக்கூற்று

### 1.6.1 புரள்வு

நிதியாண்டுக்காலப்பகுதியில் நடத்தப்பட்ட சீட்டிழுப்புகளுக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களின் பெறுமதியைப் புரள்வு காட்டுகிறது.

### 1.6.2 வருமானச்செலவு

ஆண்டுக்குரிய உபரிகளைக் கணக்கிட்டுக் காணும் பொழுது வினைத்திறமையுடன் வியாபாரத்தை நடாத்தியும் மூலதனச் சொத்துக்களைப் பேணியும் நடாத்துவதனால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செலவுகளும் வருமானத்துக்குப் பற்று வைக்கப்பட்டது.

### 1.6.3 கடன்படு செலவு

கடன்படுசெலவு மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியல் செலவாகக் காட்டப்பட்டுள்ளது.

### 1.6.4 சொத்து, இயந்திரம் மற்றும் முதலீட்டை அகற்றுதல்

சொத்து, இயந்திரம் மற்றும் முதலீடுகள் உட்பட நடைமுறைச் செலவுகள் அல்லாதவற்றை அகற்றும் பொழுது ஏற்படும் வருமானத்தன்மையில் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் வரவு மற்றும் செலவுக் கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1.7. வருமானத்தை இனங்காணல

**1.7.1** விற்பனை செய்யப்பட்ட சீட்டுக்களிலிருந்து பெற்ற வருமானம் திறன் அடிப்படையில் இனங்காணப்பட்டது.

**1.7.2** வட்டி வருமானம் கால அடிப்படையில பெருகியது.

**1.7.3** ஏனைய வருமானம் பெருகிய அடிப்படையில் இனங்காணப்பட்டது.

## 1.8 நிதியங்களைப் பங்கீடு செய்தல்

சபை 1963 இன் 11ஆம் இல நிதிச்சட்டத்தின் கீழ் ஆஸ்பத்திரி லொத்தர் சபையின் அடுத்தமைபவராக ஒருங்கிணைக்கப்பட்டது.

நிதி திட்டமிடல் அமைச்சின் அங்கீகாரத்துடன் 2008 செப்டெம்பர் 02 ஆம் திகதியிலிருந்து சபை ஒரு சீட்டின் விலையை ரூ 10 இலிருந்து ரூ20 ஆக அதிகரித்தது. சீட்டிழுப்பு (குலுக்கும்) லொத்தர் சீட்டுகள் எல்லாவற்றுக்கும் மொத்த விற்பனைத் தொகையில் 51மூ (பின்னர் 49 ஆக மாறியது) ஒதுக்குவது என்னும் புதிய பரிசுக் கட்டமைப்புஅறிமுகம் செய்யப்பட்டது. முகவர்களுக்கான தரகுப் பணமும் முறையே 15மூ த்திலிருந்து 17.5மூ ஆக அதிகரிக்கப்பட்டது.

2010 ஜுன் மாதம் முதல் மஹஜன சம்பதவைத் தவிர்த்து அனைத்து சீட்டிழுக்கப்படும் லொத்தர்களுக்கான பரிசு ஒதுக்கீடு வீதம் 49மூ இலிருந்து 47மூ ஆக மாற்றப்பட்டது. 2010ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட சிரம வாசனா மற்றும் சுவசெத என்பவற்றுக்குப் பதிலாக ஜாதிக சம்பதலொத்தர் அறிமுகம் செய்யப்பட்டது. ஞாயிற்றுக் கிழமைகளில் சிரம வாசனா மற்றும் சுவசெத என்பவற்றுக்குப் பதிலாக மஹஜன சம்பத அறிமுகப்பட்ட அதேசமயம் சுபிரி வாசனா சம்பத புதன் மற்றும் சனிக்கிழமைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. சீட்டிழுக்கப்படும் லொத்தர்களுக்கான வருமான விநியோகம் பின்வருமாறு:

சீட்டிழுக்கப்படும் (குலுக்கல்) லொத்தர்களின் வருமானப் பங்கீடு:

| | மஹஜன சம்பத | வாசனா சம்பத | கொவி செத | சுபிரி வாசனா சம்பத | |
|---|---|---|---|---|---|
| பரிசுகள் | 49% | 47% | 47% | 47% | 47% |
| விற்பனையாளர் தரகு | 17.5% | 17.5% | 17.5% | 17.5% | 17.5% |
| திரட்டிய நிதியம் | 16.5% | 16.5% | 10% | 10% | 10% |
| சபை | 17% | 19% | 25.5% | 25.5% | 25.5% |

திரட்டிய நிதியம் மற்றும் திரட்டிய நிதியத்துக்கூடாக அமைச்சுகளுக்கான பங்களிப்பு பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| மஹஜன சம்பத | | 16.5% | திரட்டிய நிதியம் |
| வாசனா சம்பத | | 16.5% | திரட்டிய நிதியம் |
| கொவிசெத | | 10% | விவசாய அமைச்சு |
| சமுர்தி | | 10% | சமுர்தி, இளைஞர் அலுவல்கள் அமைச்சு |
| சுபிரி வாசனா சம்பத | புதன்கிழமை | 10% | ரணவிரு சேவா அதிகார சபை |
| | சனிக்கிழமை | 10% | விளையாட்டு அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு |
| துயவாமைய ஞயஅியவாய | புதன்கிழமை | 10% | சுகாதார அமைச்சு |
| | சனிக்கிழமை | 10% | தொழில் அமைச்சு |

விலை மாற்றத்துக்கு முன்னர் செவன லொத்தர் திரட்டிய நிதிக்கு மொத்தப் புரள்வின் 5மூஐப் பங்களிப்பு செய்ததுடன் விலைமாற்றத்தின் பின்னர் மொத்தப் புரள்வின் 10மூஐப் பங்களிப்புச் செய்தது.


விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம் (எயர்போர்ட் என்ட் ஏவியெஷன்ஸ் (இலங்கை) நிறுவனத்தின் சார்பில் கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோவை சபை நடாத்துகின்றது. இதன் மூலமானமான வருமானம் திரட்டிய நிதியத்தினூடாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம் (எயர்போர்ட் என்ட் ஏவியெஷன்ஸ் (இலங்கை) நிறுவனத்துக்கு வழங்கப்படும்.


சபையினால் நிதித் திட்டமிடல் அமைச்சின் சார்பில் புதிய விமான நிலையத்துக்கு நிதி சேர்ப்பதற்காக நடாத்தப்பட்ட புதிய விமான நிலைய லொத்தர் சீட்டிழுப்பானது தொடர்ந்தும் நடாத்துவது சாத்தியமின்மையால் நிறுத்தப்பட்டது.


# செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு





## வரைபட மீளாய்வு



ரூ. மில்லியன்
மொத்தப் புரள்வு
6,079.80
6,832.50
8,580.50
8,862.80
10,092.30
2007 2008 2009 2010 2011


ரூ. மில்லியன்
2,944.90
4,246.50
4,295.70
2007 2008 2009 2010 2011


ரூ. மில்லியன்
971.80
1,163.30
2007 2008 2009 2010 2011


ரூ. மில்லியன்
1188.4
1792.50
2007 2008 2009 2010 2011


ரூ.மில்லியன்
73.6
31.6
209.10
2007 2008 2009 2010 2011


%
18.01
16.33
14.58
13.39
12.70

## எமது உற்பத்திகள்


### சீட்டிழுப்பு வகை லொத்தர்கள்


### மஹஜன சம்பத


எமது நாட்டில் தற்பொழுதுள்ள அனைத்து லொத்தர்களிலும் சீட்டிழுப்பு வகையைச் சேர்ந்த மஹஜன சம்பதவே தொன்மையான லொத்தராகும். இச்சீட்டானது பிரபலத்துவம் மற்றும் அதிக கேள்வி காரணமாக மக்கள் மத்தியில் தனக்கான நற்பிரதிமையை உருவாக்கியுள்ளது. இந்த லொத்தரானது வாரத்தில் செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் சீட்டிழுக்கப்பட்டு மக்களின் பார்வைக்காகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகிறது.


மீளாய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில், இந்த லொத்தரின் மொத்த விற்பனைப் புரள்வாக ரூ.4,094.1 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010இல் இந்தத் தொகை ரூ.3,501.1 மில்லியனாக இருந்தது. இது, 16.9 % அதிகரிப்பாகும். ரூ.675 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இது மொத்தப் புரள்வில் 16.5% ஆகும்.

இந்த லொத்தர் மூலம் ரூ. 10 மில்லியன் அல்லது அதைவிட அதிகமான சுப்பர் பரிசு, ரூ. 2 மில்லியன் முதல் பரிசு மற்றும் பல கவர்ச்சிகரமான பணப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.









## வாசனா சம்பத


1994ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், சபையினால் வாசனா சம்பத என்ற பெயரிலான லொத்தரொன்று சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டது. வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் இந்த லொத்தர் சீட்டிழுக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகிறது.


மீளாய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில், வாசனா சம்பத லொத்தரின் மொத்த விற்பனைப் புரள்வாக ரூ.1,080.0 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010இல் இந்தத் தொகை ரூ.969.6 மில்லியனாக இருந்தது. ரூ.178.2 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இது மொத்தப் புரள்வில் 16.5% ஆகும்.

இந்த லொத்தர் மூலம் ரூ. 10 மில்லியன் அல்லது அதைவிட அதிகமான சுப்பர் பரிசு, ரூ. 1 மில்லியன் முதல் பரிசு மற்றும் ஏராளமான கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படுகின்றன.








## கொவிசெத


சபையால. 1995 ஆம் ஆண்டு விவசாய அபிவிருத்தி அமைச்சுக்காக, விவசாயிகள் நிதியத்துக்கு நிதி திரட்டும் நோக்குடன் கொவிசெத லொத்தர் ஆரம்பிக்கப்பட்டது. இந்த லொத்தர் வாராந்தம் திங்கட்கிழமைகளில் சீட்டிழுக்கப்படுகிறது.


மீளாய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில், இந்த லொத்தரின் மொத்த விற்பனைப் புரள்வாக ரூ.1,285.5 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010இல் இந்தத் தொகை ரூ.1,148.9 மில்லியனாக இருந்தது. இது, 11.8 % அதிகரிப்பாகும். ரூ.128.5 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இது மொத்தப் புரள்வில் 10% ஆகும்.

இந்த லொத்தர் மூலம் ரூ. 10 மில்லியன் அல்லது அதைவிட அதிகமான சுப்பர் பரிசு, ரூ. 1 மில்லியன் முதல் பரிசு மற்றும் பல கவர்ச்சிகரமான பணப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.







## சுபிரி வாசனா சம்பத


சுபிரி வாசனா சம்பத லொத்தரானது 1999இல் அறிமுகப்படத்தப்பட்டது. இந்தச் சீட்டிழுப்பானது ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நடாத்தப்படுகிறது. இந்த லொத்தரின் மேலான செயற்பாடு காரணமாக, சபை இதனை புதன் கிழமைகளிலும் சீட்டிழுக்கத் தீர்மானித்து ஜயவிரு லொத்தரை மார்ச் 2011 முதல் நிறுத்திய பின்னர் விற்பனை அதிகரிப்புக்காக அறிமுகப்படுத்தியது.


இந்த லொத்தர் மூலம் திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படும் நிதியானது புதன் கிழமைகளில் பாதுகாப்பு அமைச்சின் ரணவிரு சேவா அதிகாரசபைக்கும் சனிக்கிழமைகளில் விளையாட்டு அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு ஆகியவற்றுக்கிடையே சமமாகப் பகிரப்படும்.


மீளாய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில், இந்த லொத்தரின் மொத்த விற்பனைப் புரள்வாக ரூ.1820.8 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010 இல் இந்தத் தொகை ரூ.930.4 மில்லியனாக இருந்தது. இது, 95.7% அதிகரிப்பாகும். ரூ.182.0 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இது இந்த லொத்தரின் மொத்தப் புரள்வில் 10% ஆகும்.

இந்த லொத்தர் மூலம் ரூ. 10 மில்லியன் அல்லது அதைவிட அதிகமான சுப்பர் பரிசு, ரூ. 1 மில்லியன் முதல் பரிசு மற்றும் பல கவர்ச்சிகரமான பணப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.







## ஜயவிரு

சபையானது, 2000ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சுக்காக, ரணவிரு சேவா அதிகாரசபைக்கு நிதி திரட்டும் நோக்குடன் ஜயவிரு லொத்தரை அறிமுகம் செய்தது. இது புதன் கிழமைகளில் சீட்டிழுக்கப்பட்டது. இந்த லொத்தர் பலவீனமான செயற்பாடு காரணமாக சபையால் மார்ச் 2011 இல் நிறுத்தப்பட்டு புதன் கிழமைகளிலும் சுபிரி வாசனா சம்பத அறிமுகப்படுத்தப்பட்டது.

மீளாய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில், இந்த லொத்தரின் மொத்த விற்பனைப் புரள்வாக ரூ.153.4 மில்லியன் (மூன்று மாத காலப்பகுதிக்கு) பதிவு செய்யப்பட்டுள்ளது. ரூ.15.3 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இது மொத்தப் புரள்வில் 10% ஆகும்.

## ஜாதிக சம்பத

சுவசெத மற்றும் சிரம வாசனா லொத்தர்களுக்குப் பதிலாக சபையால் மார்ச் 2010இல் அறிமுகம் செய்யப்பட்ட இந்த லொத்தரானது புதன்கிழமைகளிலும் சனிக்கிழமைகளிலும் முறையே சுகாதார மற்றும் தொழில் அமைச்சுக்காக சீட்டிழுக்கப்பட்டு, குறித்த பங்களிப்பானது இவ்விரு அமைச்சுக்களிடையே சமமாகப் பகிரப்படுகிறது.

மீளாய்வுக்குரிய ஆண்டுக்காலத்தில், இந்த லொத்தரின் மொத்த விற்பனைப் புரள்வாக ரூ.786.4 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது 2010இல் (9 மாத காலப்பகுதியில்) ரூ.492.7 மில்லியனாக இருந்தது. ரூ.78.6 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இது மொத்தப் புரள்வில் 10% ஆகும்.

இந்த லொத்தர் மூலம் ரூ. 5 மில்லியன் அல்லது அதைவிட அதிகமான சுப்பர் பரிசு, ரூ. 2 மில்லியன் முதல் பரிசு மற்றும் பல கவர்ச்சிகரமான பணப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.




உடனடி லொத்தர்

## செவன லொத்தர்


1985இல் வீடமைப்புக்குத் தேவையான நிதியைத் திரட்டும் நோக்குடன் செவன அறிமுகப்படுத்தப்பட்டது. சந்தையில் பிரபலமான சுரண்டல் வகை லொத்தரான செவன சர்வதேச அங்கீகாரமுள்ள சுரண்டி ஒப்பிடும் தொழினுட்பத்தை உள்வாங்கியுள்ளது. செவன நிறுவனம், இச்சீட்டிழுப்பை நடாத்தியது. தனியான நிறுவனமாக இருந்து செவன 1997இல் தேசிய லொத்தர் சபையுடன் ஒன்றிணைக்கப்பட்டது. இந்த லொத்தரின் விலையானது 2008ஆம் ஆண்டு செப்டெம்பர் 02ஆம் திகதி முதல் ரூ. 10/- இலிருந்து ரூ. 20/- ஆக அதிகரிக்கப்பட்டது.


மீளாய்வுக்குரிய ஆண்டுகாலத்தில், செவன லொத்தரின் மொத்த விற்பனைப் புரள்வாக ரூ.771.0 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010 இல் இந்தத் தொகை ரூ.753.8 மில்லியனாக இருந்தது. இது 2.2% அதிகரிப்பாகும். ரூ.77.1 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது. இது மொத்தப் புரள்வில் 10% ஆகும்.












## சமுர்த்தி

சமுர்த்தி அதிகாரசபைக்கு நிதி திரட்டும் நோக்குடன் 1996ஆம் ஆண்டு சமுர்த்தி லொத்தர் அறிமுகம் செய்யப்பட்டது. தேசிய லொத்தர் சபையால முதன் முதலில் சந்தையில் அறிமுகம் செய்யப்பட்ட சுரண்டல் வகை உடனடி லொத்தர் இதுவாகும். மேலும், இந்த லொத்தர் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சுரண்டி ஒப்பிடும் தொழினுட்பத்தை உள்வாங்கியுள்ளது.

இந்த லொத்தரின் விலையானது 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் 02ஆம் திகதி முதல் ரூ. 10/- இலிருந்து ரூ. 20/- ஆக அதிகரிக்கப்பட்டது.

மீளாய்வுக்குரிய ஆண்டுகாலத்தில், சமுர்த்தி லொத்தரின் மொத்தப் புரள்வாக ரூ.95.6 மில்லியன் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2010இல் இந்தத் தொகை ரூ.96.5 மில்லியனாக இருந்தது. ரூ.9.5 மில்லியன் திரட்டிய நிதிக்கு ஒதுக்கப்பட்டது.



## புதிய விமான நிலைய லொத்தர்

10,000 லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் இந்த லொத்தருக்கான சீட்டிழுப்பு நடைபெறும். இதன் விலை அ.டொ.10 ஆகும். இந்த லொத்தர் தொடர்பில் குறித்த எண்ணிக்கையிலான சீட்டுக்கள் விற்பனையாவதில் இருந்த தாமதம் காரணமாக குறித்த ஆண்டில் இந்த லொத்தர் நிறுத்தப்பட்டது. உரிய சீட்டிழுப்பு நடாத்தப்பட்டு பரிசுகளாக இரண்டு மோட்டார் வாகனங்கள் (டாட்டா இன்டிகோ கார்கள்) மற்றும் ஒவ்வொன்றும் ரூ. 150,000.00 பெறுமதிவாய்ந்த மூன்று பிள்ஸ்மா தொலைக்காட்சிகள் வழங்கப்பட்டன.

## கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ

தேசிய லொத்தர் சபை 1992இல் விமான நிலைய விமான சேவைகள் அதிகாரசபைக்கு நிதி வழங்குவதற்காக கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோவை அறிமுகப்படுத்தியது. ஒவ்வொரு சீட்டும் அ.டொ.50 அல்லது அதற்கு இணையான வேறு நாணயத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது. பரிசாக ஆடம்பர மோட்டார் வாகனமொன்று வழங்கப்படும். பரிசுக்குரிய மோட்டார் வாகனமானது கிரயம், காப்புறுதி, பயணக் கட்டணப் பெறுமதி (ஊஐகு எயடரந) மொத்த விற்பனையில் 47மூ க்குட்பட்டது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சீட்டுக்கள் (தற்பொழுது 6,000 சீட்டுக்கள்) விற்பனை செய்யப்பட்ட பின்னர் சீட்டிழுப்பு நடைபெறும். பரிசாக அதி ஆடம்பர பி.எம்.டபிள்யு (டீஆறு ) அல்லது பென்ஸ் காரொன்று வழங்கப்படும்.



## கடந்த தசாப்த சுருக்கம்

| | 2002 | 2003 | 2004 | 2005 |
|---|---|---|---|---|
| மொத்தப் புரள்வு | **4,965,365,543** | **7,181,894,656** | **6,489,740,091** | **6,166,897,652** |
| கழி: முகவர் தரகு | 742,133,045 | 1,074,594,281 | 968,625,493 | 968,319,771 |
| பரிசு ஒதுக்கவும் | 2,343,684,869 | 3,398,836,469 | 3,064,898,835 | 2,952,266,317 |
| | 3,085,817,914 | 4,473,430,750 | 4,033,524,328 | 3,920,586,088 |
| சபை வருமானம் | **1,879,547,629** | **2,708,463,906** | **2,456,215,763** | **2,246,311,564** |
| ஏனைய வருமானம் | 249,968,432 | 210,700,436 | 136,869,969 | 114,548,796 |
| | 2,129,516,061 | 2,919,164,342 | 2,593,085,732 | 2,360,860,360 |
| கழி: இயங்கு செலவு | 849,428,724 | 1,196,217,189 | 1,087,609,868 | 843,175,632 |
| மொத்த மிகை | **1,280,087,337** | **1,722,947,153** | **1,505,475,864** | **1,517,684,728** |
| கழி: அரசாங்கத்துக்கான பங்களிப்பு | | | | |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | 804,380,769 | 1,122,925,499 | 957,999,258 | 957,406,531 |
| வரி | - | 327,081,509 | 315,474,997 | 402,132,646 |
| ஏனைய பங்களிப்புகள் | - | 114,250,000 | 127,962,730 | - |
| | 804,380,769 | 1,564,257,008 | 1,401,436,985 | 1,359,539,177 |
| அதிவிசேட விடயங்களுக்கு முன்னர் மிகை | 475,706,568 | 158,690,145 | 104,038,879 | 158,145,551 |
| கழி: அதிவிசேட விடயம் | 101,075,561 | - | - | - |
| நிகர மிகை | **374,631,007** | **158,690,145** | **104,038,879** | **158,145,551** |
| அரசாங்கத்துக்கான பங்களிப்பு(%) | 16.20% | 21.78% | 21.60% | 22.05% |
| அரசாங்கத்துக்கான பங்களிப்பிலிருந்து மொத்த மிகைக்கு (மு) | 62.84% | 90.79% | 93.09% | 89.58% |
| நிகர மிகையிலிருந்து மொத்த புரள்வுக்கு(மு) | 7.54% | 2.21% | 1.61% | 2.57% |
| இயங்கு செலவிலிருந்து மொத்த புரள்வுக்கு(மு) | 17.11% | 16.66% | 16.76% | 13.68% |
| புரள்வின் வளர்ச்சி வீதம் (%) | 28.39% | 44.64% | (.10.67%) | (.4.98%) |

குறிப்பு 1:* நம்பிக்கை நிதிய நிதியின் மூலம் அமைச்சினால் கழிக்கப்பட்ட ரூ. 146.5 மில்லியன் தவிர்த்தலாக

இலக்கங்கள் ரூபாயில்

| 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|
| **6,460,015,752** | **6,079,850,149** | **6,832,519,239** | **8,580,538,712** | **8,862,869,826** | **10,092,330,623** |
| 1,025,881,243 | 971,932,383 | 1,163,307,511 | 1,585,329,388 | 1,638,501,705 | 1,874,354,373 |
| 3,115,594,961 | 2,944,926,273 | 3,373,592,920 | 4,246,564,845 | 4,295,786,207 | 4,857,951,333 |
| 4,141,476,204 | 3,916,858,656 | 4,536,900,431 | 5,831,894,233 | 5,934,287,912 | 6,732,305,706 |
| **2,318,539,548** | **2,162,991,493** | **2,295,618,808** | **2,748,644,479** | **2,928,581,914** | **3,360,024,917** |
| 136,114,584 | 191,205,560 | 257,996,742 | 340,680,571 | 212,424,233 | 178,866,138 |
| 2,454,654,132 | 2,354,197,053 | 2,553,615,550 | 3,089,325,050 | 3,141,006,147 | 3,538,891,055 |
| 1,052,703,195 | 1,095,113,324 | 1,184,190,534 | 1,251,296,219 | 1,186,623,778 | 1,290,934,224 |
| **1,401,950,937** | **1,259,083,729** | **1,369,425,016** | **1,838,028,831** | **1,954,382,369** | **2,247,956,831** |
| 845,908,023 | 767,590,790 | 898,282,571 | 1,136,298,465 | 1,173,460,051 | 1,345,046,907 |
| 466,703,676 | 420,814,224 | 428,100,646 | 656,217,994 | 733,284,428 | 693,805,894 |
| - | - | - | - | 16,000,000 | - |
| 1,312,611,699 | 1,188,405,014 | 1,326,383,217 | 1,792,516,459 | 1,922,744,479* | 2,038,852,801 |
| 89,339,238 | 70,678,715 | 43,041,800 | 45,512,372 | 31,637,890 | 209,104,030 |
| 31,024,922 | - | - | - | - | - |
| **58,314,316** | **70,678,715** | **43,041,800** | **45,512,372** | **31,637,890** | **209,104,030** |
| 20.32% | 19.55% | 19.41% | 20.89% | 21.69% | 20.20% |
| 93.63% | 94.39% | 96.86% | 97.52% | 98.38% | 90.70% |
| 0.90% | 1.16% | 0.63% | 0.53% | 0.36% | 2.07% |
| 16.30% | 18.01% | 17.33% | 14.58% | 13.39% | 12.79% |
| 4.75% | (.5.88)% | 12.37% | 25.58% | 3.29% | 13.87% |

செயற்பாட்டு மற்றும் நிதி மீளாய்வு

கலை, கலாசாரம், விளையாட்டு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான நிதிப் பங்களிப்பு




கண்டி பெரஹெர




களனி பெரஹெர



கதிர்காமப் பெரஹெர



"சுமதி" தொலைக்காட்சி விருது விழா - 2011




கார்ல்டன் சுப்பர் குரொஸ் - 2011




தேசத்துக்கு மகுடம் - 2011



பத்திரிகையாளர் மாநாடு
சசகாவா மண்டபம்




மாவட்ட விற்பனை முகவர் மாநாடு
சீ விவ் ஹோட்டல் - கொள்ளுபிட்டி





வாசனா சம்பத விசேட சீட்டிழுப்புக்கான
காசோலைகள் கையளிப்பு (பாங்கொக் சுற்றுலா)



ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சி



5S முறையைத் தொடர்தல



முகவர்களுக்கான பயிற்சிப் பட்டறை



லொத்தர் வரலாற்றில் அதிகூடிய சுப்பர் பரிசுத் தொகையை (ரூ. 61.3 மில்லியன்) அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் கையளித்த நிகழ்வு.



8சசகாவா மண்டபத்தில் சுப்பர் பரிசு வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு.

கணக்காய்வாளரின் அறிக்கை

ஈஎப்/ஏ/எள்எல்பீ/11

தலைவர்

தேசிய லொத்தர் சபை

2012 யூன் 19

**தேசிய லொத்தர் சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய லொத்தர் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(ஆ) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்ப ழியுள்ளதாக்கப்படுகின்றது.

# 2. நிதிக்கூற்றுக்கள

## 2.1 அபிப்பிராயம

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய லொத்தர் சபையின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,820,507 பெறுமதியான எதிர்கால சீட்டிழுப்பிற்குரிய ரூபா 3,474,920 தொகையான லொத்தர் சீட்டுக்கள் சபையின் களஞ்சியத்திற்கு உரிய வழங்குனரினால் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் வழங்கல்களுக்காக வழங்குனர்களுக்குச் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாக இருப்புக் கிரயங்களும் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) சபையின் லொத்தர் சீட்டுக்கள் அச்சிடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 376,528,826 மற்றும் முன்னைய ஆண்டின் போது ரூபா 293,504,383 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இச்செலவினம் நேர்ச்செலவினமாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ஏனைய செலவினமாக பொருத்தமற்று வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய லொத்தர் சபையுடன் ஒன்றிணைக்கப்பட்ட செவன லொத்தரின் மூலம் 1993 தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 89,601,618 தொகையான கடன் பணம் மற்றும் அதற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 96,075,562 தொகையான வட்டி என்பன மீளாய்வாண்டு வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செவன லொத்தர் முகவரிடமிருந்து சபைக்கு 1996 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 1,405,968 தொகையானது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை

(இ) 2003 ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட விற்பனை முகவருக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,314,430 தொகையான சேவைக் கட்டணத்தை தீர்மானிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்காமல் நிறுத்தி வைத்தல்களாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றுக்கு முன்னால் காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிகசப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள |
|---|---|---|
| (அ) சுற்றுலாவிடுதி புனர்நிர்மாணம் செய்தல் | 7,403,596 | நிதி அமைச்சின் அங்கீகாரம் |
| (ஆ) பரிசுகள் வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த தங்க நகைகள் | 2,266,430 | (i) உள்ளடங்கியிருந்த தங்கநிறை தொடர்பான அறிக்கை<br>(ii) ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இருப்பு சான்றுறுதிப்படுத்தல் அறிக்கை |

## 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1997 இன் 35 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1963 இன் 11 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் - 20 ஆம் பிரிவு | 2008 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய சட்ட வரைஞருக்கு சமர்ப்பிக்கப்பட்ட வரைபு விதிகளுக்கு இணங்க நிதிய ஒதுக்கீடு மற்றும் பரிசு பகிர்ந்தளித்தல்கள் செய்யப்பட்ட அறிக்கைகள் என்பன அறிக்கைத் திகதி வரையும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 6(2)(அ) ஆம் பிரிவு | பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உத்தியோகத்தர் களுக்காக பணிக்கொடையாக கடைசியாகக் கிடைத்த சம்பளத்தின் ½ மாத சம்பளம் ஒதுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக முறையான அங்கீகாரமின்றி மாதச் சம்பளமான ரூபா 65,695,595 ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்காக ரூபா 12,126,300 தொகை |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) 502 ஆம் இலக்க நிதிப் பிரமாணத்தின் 11 ஆவது அத்தியாயத்தின் 3 ஆவது உப பிரிவு | புத்தகப் பெறுமதி ரூபா 388,203,362 தொகையான நிலையான சொத்துக்களுக்காக சபையினால் நிலையான சொத்துப்பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. சான்றுப் படுத்தப்பட்ட சொத்துக்கள் நிலையான சொத்து மீதிகளுடன் சீராக்கப்பட்டிராததுடன் அதன் பிரகாரம் இழக்கப்படுதல் / காணாமல் போதல்களினால் ஏற்படுகின்ற நட்டம் நிதிக் கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 685 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் மற்றும் 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மைச் சுற்றுநிருபம் | சபையின் லொத்தர் சீட்டுக்களை பிரசுரிப்பதற்கான மொத்த செயற்பாட்டுச் செலவினங்களில் 29மு ஆன சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் 20.7மு வீதம் தனியார் நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட அச்சிடல் நடவடிக்கைகளுக்காகச் செலவிடப் பட்டிருந்தது. இருந்த போதிலும் இச் செலவினங்களுக்காக கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பிரசுரச் செலவினங்களில் ரூபா 267,387,445 தொகை கேள்வி கோரப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க போது முயற்சிகள் சுற்றுநிருபம் | |

| | |
|---|---|
| 9 ஆவது அத்தியாயத்தின் 7 ஆம் பந்தி | (i) உதவிப் பொது முகாமையாளர் விற்பனை, பகிர்ந்தளித்தல் மற்றும் பிரதி முகாமையாளர் பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 25,640 தொகையான சம்பளம் 2011 யூன் மாதம் 20 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் ஊடாக 2011 சனவரி 03 ஆந் திகதி தொடக்கம் ரூபா 45,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) பதவியினருக்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 7,771,220 தொகையான போக்குவரத்துக் கொடுப்பனவிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (உ) அரச பெறுவனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பந்தி | வேலை மற்றும் சேவைகளுக்காக வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய செயல் நிமித்த தொடக்க முற்பணம் ஒப்பந்தத் தொகையில் 20மு ஆக இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 50மு முதல் 75மு வரை ரூபா 39,939,818 தொகையான முற்பணம் வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஊ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய நிதி திட்டமிடல் அமைச்சின் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 142 | கூட்டுத்தாபனம் மற்றும் சபையின் ஊழியர்களுக்காக வழங்கப்படக்கூடிய விழாமுற்பணத் தொகை ரூபா 5,000 ஆக இருந்தபோதிலும் மாதாந்த சம்பளம், விழா முற்பணமாகச் செலுத்தப் பட்டமையினால் ரூபா 3,220,095 தொகையானது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) 2009 யூன் 01 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இல. 34(I) | கூட்டுத்தாபன மற்றும் சபையின் ஊழியர்களுக்காக சிபார்சு செய்யப்பட்டிருந்த இணைந்த படிக் கொடுப்பனவுகளுக்கு முரணாக பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு வீதக் கணிப்பின் அடிப்படையில் இணைந்த படியாக ரூபா 8,311,843 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 209 மில்லியன் மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 32 மில்லியன் ஆக இருந்தமையினால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 177 மில்லியன் அல்லது 553.12மு ஆன தெிகரிப்பினைக் காட்டியது.

அந்நிதிசார் விளைவுகளின் அதிகரிப்பு தொடர்பான பகுப்பாய்வொன்று கீழே தரப்படுகின்றது.

முரண்கள்

| | சாதகம் ரூபா மில்லியன் | பாதகம் ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| லொத்தர் விற்பனை வருமானம் | 1,229 | - | |
| ஏனைய வருமானம் | - | 33 | |
| | 1,229 | 33 | 1,196 |
| **செலவினம்** | | | |
| முகவர் தரகு | - | 235 | |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான பங்களிப்பு | - | 172 | |
| பரிசு வழங்கல் | - | 562 | |
| நிருவாகச் செலவினம் | - | 10 | |
| விநியோகச் செலவினம் | - | 04 | |
| நிதிச் செலவினம் | 04 | - | |
| ஏனைய செலவினம் | - | 95 | |
| பெறுமதிசேர் வரி | - | 49 | |
| தேச நிர்மாண வரி | 44 | - | |
| வருமான வரி | 44 | - | |
| திறைசேரிக்கான விசேட மானியம் | 16 | - | |
| | 108 | 1,127 | 1,019 |
| | | | 177 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாட்டு செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக்காக மன்னார் முருங்கன் பிரதேசத்தில் ரூபா 50 மில்லியன் செலவில் சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தமொன்றிற்கு உடன்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் நிர்மாண செயற்பாடுகள் 2011 மே மாதம் 05 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 180 நாட்களில் அல்லது 2011 நவம்பர் மாதம் 05 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட வேண்டியிருந்த போதிலும் 2012 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் 1986 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த அனுராதபுர பிரதேசத்தில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் அமைந்துள்ள கட்டிடமொன்றில் சுற்றுலா விடுதியொன்று பராமரிக்கப்பட்டிருந்தது. இக் கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்காக 2011 நவம்பர் 01 ஆந் திகதி ரூபா 7,403,596 தொகைக்கு தனியார் கம்பனியொன்றுக்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட திகதியில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.நிர்மாண மேற்பார்வைக்காக நியமிக்கப்பட்ட நிறுவனத்திற்கு ரூபா 505,253 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட மேற்பார்வை நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குத்தகைக் கால எல்லை 4 வருடங்கள் மாத்திரம் எஞ்சியிருக்கின்ற போது இவ்வாறான புனர்நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படுதல் பொருளாதார ரீதியில் உசிதமாக இருக்கின்றதா என்பது கணக்காய்வில் சிக்கலுக்குரியதாக இருந்தது.

(இ) சபைக்காக கட்டிடமொன்று நிர்மாணிப்பதற்காக 2010 யூலை 21 ஆந் திகதி ரூபா 300 மில்லியன் செலுத்தப்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டு

அக் காணியில் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 619 மில்லியன் நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாமல் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடமொன்றில் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக ரூபா 13.58 மில்லியன் வாடகையினை வெளித் தரப்பினருக்குச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஈ) விற்பனை மேம்படுத்தல் செலவினத் தலைப்பின் கீழ் முற் திட்டமிடலின்றி ரூபா 4,000,000 தொகை செலவினம் செய்யப்பட்டிருந்தது.

## 4.2 செயற்பாடற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) லொத்தர் பரிசுகளை வழங்குவதற்காக 1996 ஆம் ஆண்டிலிருந்து சபையானது ஒரு பவுண் ரூபா 8,668 படி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 16 பவுண்கள், ஒரு பவுண் ரூபா 4,860 படி கொள்வனவு செய்திருந்த 2 பவுண்கள் மற்றும் ஒரு பவுண் ரூபா 9,299 படி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 57 பவுண்கள் என்பனவற்றின் கூட்டுப் பெறுமதியான ரூபா 678,451 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை பரிசுகளை வழங்குவதற்காக ஈடுபடுத்தப்படாமல் களஞ்சியங்களில் வைக்கப்பட்டிருந்ததுடன் அத் தங்க ஆபரணங்களின் நிகழ்காலப் பெறுமதி ரூபா 1,185,000 ஆகக் காணப்பட்டது.

(ஆ) பரிசாகப் பகிர்ந்தளிப்பதற்காக 2009 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,104,536 கூட்டுத்தொகையான 5 மோட்டார் சைக்கில்கள் மற்றும் 2 முச்சக்கர வண்டிகள் என்பன மீளாய்வாண்டு வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் இருந்ததுடன் அவ்வாகனங்கள் சபைக்குச் சொந்தமான வாகனத் தளத்தில் பாதுகாப்பின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

(இ) செயற்பாடுகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 536,470 கூட்டுத்தொகையான பித்தளை விளக்குகள், துவிச் சக்கர வண்டிகள், தொலைக்காட்சிகள், தையல் இயந்திரங்கள், தேனீர் கோப்பைகள், டீசேர்ட்கள் மற்றும் குடைகள் போன்ற இருப்புக்களை பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் இருப்புக்கள் பரிசுகளுக்காக பகிர்ந்தளிப்பதற்கோ அல்லது ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுத்தவோ செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இந்தியக் கம்பனியொன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்த சுரண்டல் லொத்தர் சீட்டுக்கள் துறைமுகத்திற்குக் கிடைத்து 07 தினங்களுக்குள் எடுத்துச் செல்லப்படாமையினால் ரூபா 357,291 தொகையான தாமதத் தண்டப்பணம் செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் 6,700 செவன சுரண்டல் லொத்தர் சீட்டுக்கள் மற்றும் 32,900 சமுர்த்தி சுரண்டல் லொத்தர் சீட்டுக்கள் நீரில் அழிவடைந்தமையினால் சபைக்கு ரூபா 67,914 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) 2008 திசெம்பர் 17 ஆந் திகதிய எம்எப்/2/2/டீஎல்பீ/ரீஎன்டீ/02 ஆம் இலக்க அமைச்சரவையின் ஒப்புதலின் பிரகாரம் உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து லொத்தர் சீட்டுக்களை அச்சிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் மீளாய்வாண்டில் மாத்திரம் சபைக்கு ரூபா 47,101,200 தொகையான செஸ்வரி மற்றும் ரூபா 22,703,677 தொகையான இறக்குமதித் தீர்வை என்ற செயற்பாடற்ற செலவினங்களைச் செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது.

சபையினால் 2002 யூன் 12 ஆந் திகதி பிரமுக வங்கியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 5,000,000 தொகையான முதலீடு மற்றும் அம் முதலீடுகளுக்காக கிடைக்க வேண்டிய வட்டி வருமானமும் சபையினால் இழக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் கணக்குகளில் அம்முதலீட்டுத் தொகைக்குச் சமமாக அறவிட முடியாக் கடன் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.4 மனித வள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 281

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 281 மாத்திரமாக இருந்த போதிலும் சபையினால் பதவியணியினர் 304 பேர் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை நிலைகளையும் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரங்கள் | 25 | 24 | 01 | - |
| நிறைவேற்றுனர் அல்லாத தரங்கள் | 256 | 242 | 14 | - |
| ஒப்பந்த அடிப்படை | - | 38 | - | 38 |
| மொத்தம் | 281 | 304 | 15 | 38 |

## 5. கணக்கீட்டின் செயற்பாட்டுத் தன்மையும் உள்ளகக் கட்டுப்பாடும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவைகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுபாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) மனித வள முகாமைத்துவம்
(ஆ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) செலவின முகாமைத்துவம்
(உ) இருப்புக்கள்

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி